Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களை
யும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 21 (22.07.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 293

## நோர்வே தூதுவர் வெஸ்பேர்க் மீண்டும் இன்று வன்னிக்கு!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் வெஸ்பேர்க், இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அரசினால்- விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைபு குறித்து, விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்காகவே இன்றைய சந்திப்பு நடைபெறுமெனத் தெரியவருகிறது.

மேற்படி திட்ட வரைபை, விடுதலைப் புலிகள் தற்போது பரிசீலனை செய்து வருகின்றனர். இவ்விடயம் குறித்து, விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரை உத்தியோக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இங்கிலாந்து செல்லும் தமிழீழ வலைப்பந்தாட்ட அணி



தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது

பிரிட்டன் புரோமிங் நகரிலுள்ள ரோமன் பார்க் மைதானத்தில், இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள 8 ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் பங்கேற்க, தமிழீழ வலைப்பந்தாட்ட அணி செல்கிறது.

முதன்முதலில் தமிழீழத்தில் வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினரை - தமிழீழ அரசியறதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, அரசியறதுறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ விளையாட்டு ஒழுங்கமைப்புக் குழுத்தலைவர் பத்மநாதன் ஆகியோர் சந்தித்து வழியனுப்பிவைத்தனர்.

அணியின் பயிற்றுனர் செல்வி ரதிகலா, முகாமையாளர் றொஹான் ராஜசிங்கம், விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் இந்த அணியை அழைததுச் செல்கின்றனர்.

## சுறா மீனுக்குள் குண்டாம்; எடுத்துவர படையினர் தடை!

### பருத்தித்துறைக் கடற்கரையில் சம்பவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில்- பெரியளவிலான சுறாமீன் ஒன்று நேற்றுப் பிடிக்கப்பட்டது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட சுறா மீனை, கரைக்கு எடுத்துச் செல்ல மீனவர்கள் முயற்சித்தபோது- கடற்கரையில் காவலுக்கு நின்ற படையினர் அம்மீனை வெளியே எடுத்துச் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். அம்மீனுக்குள் வெடிகுண்டு இருப்பதாகக் கூறியே, படையினர் அதனை கரையை விட்டு எடுத்துச்செல்ல அனுமதிமறுத்தனர்.

இதனைத் தொடர்ந்து- அந்த மீன் கடற்கரையில் வைத்து வெட்டப்பட்டு, அதற்குள் வெடிகுண்டு இல்லை என உறுதிசெய்யப்பட்ட பின்னரே- அம்மீனை வெளியே எடுத்துச்செல்லப் படையினர் அனுமதித்தனர். (09)

## புலிகள் தனியரசு அமைப்பதை தடுக்க இன்னும் வாய்ப்புண்டு!

## கூறுகிறார் முன்னாள் இந்தியத் தூதுவர் டிக்ஷிற்



(புதுடெல்கி)

**வடக்கு - கிழக்கில் புலிகளால் தனியானதொரு அரசாங்கம் அமைக்கப்படுவதைத் தடுப்பதற்கான தலையீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்னமும் இந்தியாவுக்கு இருப்பதாக, இலங்கைக்கான முன்னாள் தூதுவரும், இந்திய வெளியுறவு அமைச்சின் ஆலோசகருமான கே.என்.டிக்ஷிற் தெரிவித்துள்ளார்.**

புதுடெல்கியில் வைத்து ஐ.ஏ. என்.எஸ். செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், டிக்ஷிற் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கைத் தீவில்- தனியொரு இறைமையுள்ள நாட்டை உருவாக்குவதே புலிகளின் அடிப்படைக் குறிக்கோள். இந்த விடயம் பற்றி இந்தியா ஆழமான கவனம் கொண்டுள்ளது.

தனியான தமிழ்த் தாயகப் பகுதியை அங்கீகரிக்கக்கூடிய ஒரு நிர்வாகத்தையே அரசாங்கத்திடமிருந்து புலிகள் எதிர்பார்ப்பதாகக் கூறிய டிக்ஷிற், இது விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கோரிக்கைகளையே பிரதிபலிப்பதாகவும் குறிப்பிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக் கடலில் கோதுமை கப்பல்; புலிகளதென அருண்டது கடற்படை!

அக்கரைப்பற்று- பொத்துவில் வீதியின் சின்ன முகத்துவாரம் கடற்பரப்பில், ஒதுங்கியிருந்த மர்மக் கப்பல் கடற்படை வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நேற்றுமுன்தினமிரவு- 7.50 மணியளவில், இந்தக் கப்பலைத் தாம் அவதானித்ததாகவும், பின்னர் இது தொடர்பாக- திருகோணமலை கடற்படை முகாமிற்கு அறிவித்ததாகவும், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதனையடுத்து- கப்பல் தொடர்பான விசாரணைகளை கடற்படையினரும், விமானப்படையினரும் மேற்கொண்டனர். அத்துடன், விமானப் படையினர் ஹெலிகொப்ரர்கள் மூலமாக ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, உக்ரேனிய நாட்டுக் கொடியுடன் பிரயாணத்தை மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால்



மட்டக்களப்பு மாவட்டத்திலும், அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு மக்கள் பெருமன்றம்- நேற்றும், இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம்- பரணீதரன் என்ற மாணவன் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் உட்படப் பல பிரச்சினைகளை முன்வைத்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

தமிழர் பிரதேசங்கள் முற்றாகச் செயலிழந்திருந்ததுடன், ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேசத்திலும்- வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.புனர்வாழ்வு நிதி மோசடி விவகாரம்

## குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முக்கிய ஆவணங்கள் ஆராய்வு!

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களில், நடைபெற்ற பாரிய நிதிமோசடி தொடர்பான குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் (சி.ஐ.டி) விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேற்படி செயற்திட்டங்கள் தொடர்பான- பல்வேறு ஆவணங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தற்போது ஆராயத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

குறித்த நிதி மோசடி தொடர்பான குற்றச்செயல், மிகவும் பாரதூரமானது என்ற காரணத்தினாலேயே, இந்த விவகாரம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் பூர்த்தியானதும், மேற்படி நிதி மோசடி பற்றிய பூரண அறிக்கை ஒன்று, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

### விண்ணாணம் விநாசியர்



வயசு கிழண்டினாலும் உவருக்கு நரித்தனம் மாறுதில்லை பார்...

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)



திருமலை மாவட்டத்தில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான இலக்கந்தையில் உள்ள - இலக்கந்தை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கட்டடத்தை - புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி திரு.சி.பதுமன் கட்டடத்தை திறந்து வைப்பதை முதற்படத்திலும், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.சி.திலக் பாடசாலைக் கட்டடப் பெயர் பலகையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், நினைவுப்படிகத்தை மாணவர்கள் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படம் - கீதபொன்கலன்)

### அமெரிக்கக் குழுவினரால்

# மிதிவெடி அகற்றப்பட்ட சரசாலை; பிரதேச செயலரிடம் ஒப்படைப்பு!

அமெரிக்காவின் 'ரொங்கோ' மிதிவெடியகற்றும் பிரிவினரால், மிதிவெடியகற்றப்பட்ட சரசாலைப் பிரதேசத்தை, சாவகச்சேரி பிரதேச செயலகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

சரசாலை மத்தியிலுள்ள 72 ஆயிரம் சதுரமீற்றர் விஸ்தீரணமுள்ள பிரதேசமே, இவ்வாறு 'ரொங்கோ' மிதிவெடியகற்றும் பிரிவினரால், மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் செந்தில்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அப்பிரதேச கிராம சேவையாளர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

மிதிவெடியகற்றப்பட்ட பிரதேசம் தொடர்பான ஆவணங்களை, 'ரொங்கோ'வின் மிதிவெடியகற்றும் நிபுணர் டொன் சிமித் - பிரதேச செயலக அதிகாரி ஒருவரிடம் கையளித்தார்

இப்பிரதேசத்தில் - 321 தனிநபர் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் ஆகியவற்றோடு வெடிக்காத ஷெல்களும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.




நேற்று நடைபெற்ற பிரதேச ஒப்படைப்பு வைபவம்

## சவர்க்கார உற்பத்தியில் சாதித்த கனகராசா



1927 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில், சவர்க்காரக் கந்தையா என்று அழைக்கப்பட்ட அமரர் வீ.மு.கந்தையா பிள்ளைக்கும் மீனாட்சிக்கும் மூன்றாவது ஆண்மகனாக க.கனகராசா பிறந்தார்.

இவரது ஆரம்பக்கல்வியை யாழ்.கில்னர் கல்லூரியில் கற்றபின், கம்பளைக்குச் சென்று வியாபாரத் தொழிலைப் பழகினார்.

அதன்பின் யாழ்ப்பாணம் திரும்பி சோப் தொழிற்சாலையைத் தந்தையாரிடமிருந்து பொறுப்பேற்று நடத்தி வருகையில், மில்க்வைற் தொழிலகம், நூறுபேரைத் தன்னகங்கொண்டு 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொன் விழாவைக் கண்டு வளர்ச்சிப்பாதையில் பொலிவுபெற்றது.

இலங்கை மக்கள் அந்நியப் பொருட்களில் மிக்க மோகங்கொண்டு வருவதை இனங்கண்டு, இந்தச் செம்மையற்ற மனப்போக்கை மாற்றவேண்டும் என்பதை தம் தொழில் அனுபவத்தால் தேர்வுகொண்ட கனகராசா - உடற்தூய்மை, உள்ளத்தூய்மை என்ற எண்ணத்தில் முதிர்வுகொண்டார்.

குழந்தைகள் ஏடு தொடக்கும்போது, உபயோகமான வண்ணம் பனையோலையில் - அச்சுப்பொறித்த உயிர், மெய் எழுத்துக்கள் கொண்ட ஏடுகளை ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் உபகரித்து வந்தார்.

**மறைந்தார் மாண்பு**

இவர் ஆற்றிய சேவைக்காக- மக்கள் இவருக்கு "சிவ நெறிப்புரலவர், சிவதர்ம வள்ளல், செந்தமிழ்ச்செல்வர், பூலோக கற்பகதரு நாயகர், காலகாவலர், திருக்குறள் காவலர்" போன்ற பட்டங்களைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

தன்னை முழுமையாக அர்ப்பணித்து, இந்த நாட்டிற்குச் சேவையாற்றியமைக்காக "தேசாபிமானி" என்ற சிறந்த பட்டத்தை 1994 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.

இவர் 1998 ஜூலை 22 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்தார்.

# போஷாக்கு நிறைந்த உணவு சிறாருக்கு வழங்கப்படவேண்டும்!

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பேச்சு

போஷாக்கு நிறைந்த உணவுகளை உட்கொள்ளும் மாணவர்களே பாடபோதனைகளையும் சிறப்பாகக் கிரகிக்கிறார்கள். அத்துடன், அவர்கள் விளையாட்டிலும் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இதன்மூலம் அவர்களால் சகல துறைகளிலும் சிறந்து விளங்கமுடிகிறது. பெற்றோர்களும் தமது குழந்தைகளுக்கு இடைவிடாது போஷணை கூடிய உணவுகளை வழங்கவேண்டும்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலிதெற்கு பிரதேச சபையினரால் அதன் எல்லைக்குட்பட்ட 42 முன்பள்ளி சிறுவர்களுக்கு, 85,000 ரூபா பெறுமதியுடைய சத்துணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவிநாயகம் உரையாற்றுகையில் - உள்ளூராட்சி சபைகள் தமது நிதியை பிரயோசனமற்ற முறையில் செலவழிக்காது, எதிர்காலச் சிற்பிகளாகிய சிறுவர்களின் போஷாக்கிற்கு பணத்தைப் பயன்படுத்துவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும் என்றார்.

இந்த நிகழ்வில் - பிரதேசசபை ஊழியர்கள், சனசமூகநிலைய அங்கத்தவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (101)

### இங்கிலாந்து பிராந்திய அணியுடன் முரளிதரன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் - இங்கிலாந்தில் கென்ற் பிராந்திய அணியில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார்.

இதன்படி, இங்கிலாந்து கென்ற் பிராந்திய அணியில் இணைவதற்கென முத்தையா முரளிதரன் இன்று பிரிட்டன் பயணமாகவுள்ளார்.

இம்மாதம் 27 ஆம் திகதி லண்டன் யோகஷயர் பிராந்திய அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் மூலம், முத்தையா முரளிதரன் முதன் முறையாக கென்ற் பிராந்திய அணியில் இணையவுள்ளார்.

### அரியாலையில் கால்நடை வைத்தியசேவை

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் - நடமாடும் கால்நடை வைத்திய சேவை நாளை நடைபெறவுள்ளது.

மேற்படி வைத்திய சேவையில் கோழிகளுக்கான நோய்த்தடை ஊசி ஏற்றல், கால்நடை வைத்தியம், கால்நடை சம்பந்தமான விரிவாக்கல் சேவை, செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை, கர்ப்பப் பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன. (55)

# அடையாள அட்டை இடம்பெயர்சேவையில் பத்தாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில், இடம்பெற்ற தேசிய அடையாள அட்டை விநியோகம் செய்யும் நடமாடும் சேவையில், பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட சகல பிரதேச செயலகங்களிலும் கடந்தவாரம் இடம்பெற்ற - தேசிய அடையாள அட்டைகளை விநியோகம் செய்வதற்கான நடமாடும் சேவையிலேயே, பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பம் செய்தனர்.

புதிதாக தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கும், சேதமடைந்த அடையாள அட்டைகளைப் புதுப்பிப்பதற்கும், அடையாள அட்டைகளில் திருத்தங்களைச் செய்வதற்குமே விண்ணப்பங்கள் செய்யப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில், விண்ணப்பங்களை செய்தவர்களுக்கு, மூன்று வாரங்களில் தேசிய அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# தேசிய எழுச்சிப் பேரவை தென்மராட்சியில் கூட்டம்!

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட, ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல், நாளை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சகல ஊரகக் கிளை உறுப்பினர்களையும், சகல கிராம உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் - தலைமையுரையை தென்மராட்சி, தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சி.க.வேலாயுதபிள்ளையும், சிறப்புரைகளை - யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறை, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் நிகழ்த்தவுள்ளனர்.


**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**யாழ். பண்ணை மீன்சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளன.**

**நிர்ணயித்த ஆகக்குறைந்த கேள்வி ரூபா 5,00,000/=**

**மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.**

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.07.18 (சி-1256)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

கரன், குஷ்பு நடித்த

ஸ்ரீ பண்ணாரி அம்மன்

(சி-1338)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்

THE ART OF WAR

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



ப்ரியமான தோழி

10.30, 2.30, 6.30. [illegible].30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். இயக்கம் விக்ரமன் (சி-1137)


## சிறு விளம்பரம்

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள் புதிய பிரிவு 23.07.2003 இல் ஆரம்பம்.

தொடர்பு: 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1253)

### விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்று உரப்பை, வெற்றுச்சாக்கு விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு 28.07.2003 ஆம் திகதிக்குப் பிந்தாது கூறு விலையைச் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-1255)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

கடந்த 19.07.2003 அன்று சாவகச்சேரி வீதியில், புத்தூர் சந்திக்கும் புத்தூர் ஈஸ்வரன் ஆலயத்துக்குமிடையில் டொல்பின் வானிலிருந்து (இல.6051) விழுந்த இரண்டு Bags கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு, சிவாகரன், தேநீர்க்கடை, புத்தூர் கிழக்கு. (426)

# வடக்கு - கிழக்கை பிரிக்கக் கோருவது முஸ்லிம்கள் எதிர்காலத்துக்கு ஆபத்து!

## பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் எச்சரிக்கை

வடக்கு - கிழக்கைத் தனித் தனியாகப் பிரிக்குமாறு கோருவது, முஸ்லிம்களின் அரசியல் எதிர் காலத்துக்கு ஆபத்தானது என்று, பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கைப் பிரிக்கவேண் டும் என்று அதாவுல்லா அணியினர் தெரிவித்துள்ள கருத்துத் தொடர் பாகக் கருத்துக் கூறியபோதே, பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்குத் தனி அலகு ஒன்று கோருவதில் நியாயமுள்ளது. ஆனால், இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்குமாறு கோருவது எந்தவகை யிலும் நியாயமானதல்ல.

ஒருமுறை வடக்கு - கிழக்கை இணையுங்கள் என்றும், பின்னர் முஸ் லிம்களுக்கு தனி அலகு என்றும், இப்போது வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்றும் முஸ்லிம்க ளின் சார்பில் கோரிக்கை விடுக்கப் படுவது - முஸ்லிம்களின் நிலையற்ற அரசியற் தன்மையையே வெளிப்ப டுத்தும் என்றும் - பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மேலும் தெரி வித்தார்.

# மூவினத்தவர் பயிலும் பாடசாலைகளின் அதிபர்களை சந்திரிகா சந்திக்கிறார்!

(கொழும்பு)

மூவின மாணவர்களும் ஒரே பாடசாலையில் கல்வி பயிலும் பாடசாலை அதிபர்களை,ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க நாளை புதன்கிழமை கொழும் பில் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்விற்கு - கல் வியமைச்சர் கருணாசேன கொடித் துவக்கு, துறைமுக அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்ன ணித் தலைவி ஃபேரியல் அஷ்ரப் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தி யில் தேசிய உணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மூன்று இனங்களையும் சேர்ந்த மாணவர்களும் ஒரே பாடசா லையில் கல்வி கற்கும் திட்டத்துக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டுமென, 2001 ஆம் ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

மூன்று இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் - ஒரே பாடசாலையில் கல்வி கற்பதில் ஏற்படும் பிரச்சினை கள், அதனை நிவர்த்திசெய்ய எடுக் கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இந்தச் சந்திப்பில் ஆராயப் படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# புத்தளம் பஸ் நிலையத்துக்குள் நுழைய நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தடை!

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கபண்டார, வட மேல் மாகாணசபை ஐ.தே.க. உறுப் பினரான ரூபன் சில்வா உள்ளிட்ட 18 பேரை - புத்தளம் பஸ் நிலையத் துக்குள் பிரவேசிக்கக்கூடாது என, புத்தளம் நீதிமன்றம் தடைவிதித் துள்ளது.

புத்தளம் நீதிவான் அமல் தில கரத்ன - இவர்களுக்கு, 14 நாட்கள் இடைக்கால தடையுத்தரவை, கடந்த வெள்ளிக்கிழமை பிறப்பித்தார்.

வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால், புத்தளம் பஸ் நிலையத்தில் தனி யார் பஸ்வண்டிகளின் நேரக்கணிப் பீட்டாளர்களாக நியமிக்கப்பட்ட 14 பேரை, கடந்த மாதம் 25 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார தலைமையிலான குழு வினர் - பஸ் நிலையத்தினுள் புகுந்து விரட்டியடித்துவிட்டு, ஐ.தே.க. ஆதர வாளர்கள் 14 பேரை நேரக் கணிப் பீட்டாளர்களாகக் கடமையாற்ற ஏற் பாடு செய்தனர்.

இதனையடுத்து, வேலையிழந்த மேற்படி 14 பேரும் ஒன்றிணைந்து, புத்தளம் நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்தனர். இதனைப் பரிசீலனை செய்த நீதிவான் அமல் திலகரத்ன - நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தலைமையிலான குழுவினருக்கு, இடைக்காலத் தடையுத்தரவை வழங் கினார்.

# நாடு உருப்படுவதற்கு வாய்ப்பில்லை என்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா!



"தற்போதைய சூழ்நிலையில், நாடு உருப்படும் என நான் நினைக்கவில்லை. நாடெங்கும் கொலைக் கலாசாரம் மலிந்து காணப்படுகின்றது. கொலைகாரர் கள்- அரசியல்வாதிகளின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்."

- இவ்வாறு, ஜனாதிபதி சந்திரிகா, இரத்தினபுரி நகரத்தில் ஆயுர்வேத வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விடுதி ஒன்றினை உத்தி யோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றியபோது, குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா தனது உரையில் மேலும் கூறியதாவது -

தற்போதைய சூழ்நிலையில் நாடு உருப்படக்கூடிய வாய்ப்புக்கள் குறைந்து விட்டன. ஏனெனில், பலரும் சிறு பிரச்சினைகளுக்குக்கூட, துப்பாக்கிகளைக் கையில் ஏந்துகின்றனர். கொலைக் கலாசாரம் மலிந்து காணப்படுகின்றது. அத் துடன், கொலைகாரர்கள் - அரசியல்வாதிகளின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மோசடிகள், வன்முறைகள், சட்டவிரோதச் செயல்கள், கசிப்பு, போதைப் பொருட்கள் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. நாடு இதனால் குட் டிச்சுவராகிப் போயுள்ளது. தீவைப்புச் சம்பவங்கள், துப்பாக்கிக் கலாசாரம் தொடர்கின்றன. இது தொடருமாயின், நாம் வனவிலங்குகளாக மாறிவிடுவோம் என, அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டவரை இத்தாலிக்கு அனுப்பும் முக்கிய முகவர் கண்டியில் வைத்து கைது!

## 114 இந்திய, பாகிஸ்தானிய, பங்களாதேஷ் வாசிகளும் பிடிபட்டனர்



இத்தாலிக்குச் செல்லக் காத்திருந்தபோது, கண்டியில் வைத்துப் பொலி ஸாரிடம் பிடிபட்ட வெளிநாட்டவர்கள் இவர்கள்தான்.

இலங்கை ஊடாக இத்தாலிக்கு வெளிநாட்டவர்களை அனுப்பும் முகவராகச் செயற்பட்ட முக்கியமான நபர் ஒருவரை, தாம் கைதுசெய் திருப்பதாக, கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திரா இதுகுறித்து தகவல் வெளியிடு கையில் -

கைதுசெய்யப்பட்ட முக்கியமான சந்தேகநபர் - இந்தியர் எனத் தெரிய வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் இரண்டு வீடுக ளைச் சுற்றிவளைத்து நடத்திய தேடுதலில், 114 வெளிநாட்டவர்கள் பிடிபட்டனர்.

இவர்களில் - 83 இந்தியர்களும், 22 பாகிஸ்தானியர்களும், 9 பங்காள தேஷ் நாட்டவர்களும் அடங்கியுள்ள னர். இவர்களில் அநேகமானவர்களின் விஸா முடிவடைந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாலிக்குச் செல்வதற்காகத் தங்கியிருந்த இவர்கள், மூன்று முதல் நான்கு இலட்சம் ரூபாவை ஒவ்வொரு வரும் முகவருக்குச் செலுத்தியுள்ள னர். இவர்களை அடுத்தமாதம் இத் தாலிக்கு அனுப்புவதாக முகவர் உறுதியளித்திருந்தார்.

போதிய உணவு மற்றும் அடிப் படை வசதிகளின்றித் தங்கவைக் கப்பட்டிருந்த இவர்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள, இந் தியத் தூதரகத்தின் உதவியையும், பொலிஸார் நாடியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# ஜே.வி.பியுடனான பேச்சுக்களில் நல்லமுன்னேற்றம் உள்ளது!

## சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடு தலை முன்னணிக்குமிடையிலான கூட்டுக் குறித்து, தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின் றன. இந்தப் பேச்சுவார்த்தையில் நல்லமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பதவிகளைப் பங்கிடுவது குறித் துப் பேச்சுவார்த்தையில் இரு கட் சிகளுக்கிடையில் கருத்து முரண் பாடுகள் ஏற்பட்டுள்ளதாக, ஊடகங்க ளில் வெளிவந்த செய்திகளில் எந்த வித உண்மையுமில்லை என, சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை சுதந் திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் பேச்சு வார்த்தை நடைபெற்றது. சுதந்திரக் கட்சி சார்பில் அதன் தலைவி ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, அநுர திஸநாயக்க ஆகியோரும் இந் தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். அடுத்த பேச்சுவார்த்தை இன்று நடைபெறும் என்றும், மைத்தி ரிபால சிறிசேன தெரிவித்தார்.

### மொபெட் சைக்கிள்களுக்கு இனி லைசன்ஸ் வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

காலாலும், மோட்டார் இயந்திரம் மூலமும் இயக்கக் கூடிய 'மொபெட்' சைக்கிள்களுக்கும் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து - பதிவுப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றைப் பெறவேண்டும் என்று, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் மொபெட் சைக்கிள்களைச் செலுத்துவோர், மோட்டார் சைக் கிள்களுக்குரிய சகல ஆவணங்க ளையும் வைத்திருக்க வேண்டும் என் றும், தலைக்கவசம் அணியவேண் டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்து வட-கிழக்குக்கு இழுக்க முயற்சி!

## அமைச்சர் காமினி லொக்குகே தகவல்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உல்லாசப் பிரயாணத் தொழிற்று றையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பித்து வைக் கப்பட்டிருப்பதாக, உல்லாசப் பிரயா ணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக- மட்டக்களப்பில் உல்லாசப் பிரயா ணிகளைக் கவரும் கடற்கரைப் பிர தேசமான பாசிக்குடாவில், நூறு ஏக் கர் அரசகாணி, தனியாருக்கு வழங் கப்படவிருப்பதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு உல்லாசப் பிரயாணி களைக் கவர்ந்திழுக்கும் நோக் கில், உள்நாட்டு விமானப் போக்கு வரத்துச் சேவைகளை அதிகரிப்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் அரசாங் கம் பேச்சு வார்த்தைகளை நடத்த வுள்ளதாகவும், அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார்.

### பருத்தித்துறையில் 15 லட்ச ரூபா செலவில் வீதி திருத்தம்

பருத்தித்துறை - தும்பளை வீதியின் திருத்தப் பணிக்கு, 15 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. இந்த வீதித் திருத்தப் பணிகளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்று மேற்கொள்கிறது.

இந்த வீதி - கடந்த 15 வருடங் களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் முக்கிய திருத்தங்கள் திட்டவரைபில் அவசியம்!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

வட-கிழக்கு இடைக்கால நிர்வாகசபை தொடர்பான அரசாங்கத்தின் திட்டவரைபில். முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்றத்தக்க வகையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண் டும் என்று, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை வரும்- துறைமுகங்கள், கப்பற்துறை, கிழக்கு அபிவி ருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான அரசாங்கத் தின் திட்டவரைபு குறித்துக் கருத்து வெளியிட்டபோதே, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

அரசாங்கம் - விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபில் பிரதிநிதித்துவம் குறித்தும், பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகவும் மேலோட்டமாகவே ஆராயப் பட்டுள்ளது. கொள்கையடிப்படையில் தெரிவிக்கப்பட் டுள்ள விடயங்களை நடைமுறையில் எவ்வாறு செயற் படுத்துவது என்பது குறித்துப் பேச்சுவார்த் தையின்போது, நாம் எமது யோசனைகளைச் சமர்ப்பித்து வலியுறுத் துவோம்.



அரசாங்கத்தின் திட்டவரைபில் கொள் கைரீதியாகவே விட யங்கள் அடையாளப்ப டுத்தப்பட்டுள்ளன. நடைமுறைக்கான கட் டமைப்பு பற்றிக் கூறப் படவில்லை. எமது மாற்று யோசனையில் இதுபற்றி எடுத்துக்கூறப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு சமுர்த்தி வங்கிகள் வரப்பிரசாதமாகும்

## மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் உரை

(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிகள், தென்பகுதியில் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆனால், யாழ். மாவட்டத்தில் இப்போதுதான் சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன என்று - யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கி திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

சமுர்த்தித் திட்டங்களின் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தபட்டுள்ளன. கிராம அபிவிருத்திக்கு 2 இலட்சம் ரூபாவும், சந்தைப்படுத்தலுக்கு 1 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து சமுர்த்தி அதிகாரசபைக்கு - மீன்பிடி, விவசாயத் திட்டம் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இதுவரை 24 சமுர்த்தி வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன.

புதிதாக 32 சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்த சமுர்த்தி வங்கி - மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்பனில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி வங்கிகளுக்கு 13.1 மில்லியனும், சிறுகுழுத் திட்டத்துக்கு 15 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்குச் சமுர்த்தி வங்கிகள் ஒரு வரப்பிரசாதமாகும்.

சிறுகுழுக்கள் அமைக்கப்பட்டு, சிறுகுழுக்கள் மூலம் சேமிப்புகளை ஏற்படுத்தி, கடன் வசதிகளைப் பெற்று வறியமக்கள் முன்னேற முடியும் என்றார். (17)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி - புலோலி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தில் பருத்தித்துறைப் பிரதேசசபை உத்தியோகத்தர் எஸ்.பூபாலசிங்கம் மரமொன்றை நாட்டிவைப்பதையும், அருகில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.தம்பிமுத்து, பிரதேசசபைச் செயலாளர் அ.அ.நடராசா ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

### உயர்பாதுகாப்பு வலயம் குறித்து

# மனித உரிமை ஆணைக்குழுவில் நானூற்று முப்பது பேர் முறைப்பாடு!

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு, இதுவரை நானூற்று முப்பதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

உயர்பாதுகாப்பு வலயமென, ராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும், மீளக்குடியேற அனுமதி வழங்கப்படாதது - மனித உரிமைகளை மீறும் செயலென, பொதுமக்கள் பலர் முறைப்பாடு செய்துள் ளனர்.

தற்போது - இது தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழுவினர் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது. அண்மையில் இராணுவத் தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்லவை, கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் இப்பிரச்சினை தொடர்பாக அழைத்து விசாரணை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாகர்கோயில் அணி சம்பியன்!

உள்ளூராட்சி வாரத்தையொட்டிப் பருத்தித்துறை பிரதேசசபையால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் - "செற் கேம்", "ஓவர் கேம்' ஆகிய இரு போட்டிகளிலும் - நாகர்கோயில் சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் குழு சம்பியனாகத் தெரிவானது.

இவ்விளையாட்டுச் சுற்றுப்போட்டிகள் - புலோலி மேற்கு நாவலர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இறுதிச் சுற்றுப்போட்டியில், பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் அ.அ.நடராசா - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, இச்சுற்றுப்போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

# மாமுனை - கட்டைக்காடு வீதி; சிரமதான அடிப்படையில் திருத்தம்!

## பணிகள் வேகமாக நடைபெறுகின்றன

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் - கட்டைக்காடு வரையிலான கடற்கரைவீதி, சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 18.2 கி.மீ. நீளமான வீதியே, சிரமதானம்மூலம் செப்பனிடப்பட்டு வருகிறது. உலக உணவுத் திட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

சிரமதானத்தில் பங்குகொள்பவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகிறது. இந்தச் சிரமதான வேலைகளில் ஒன்பது கடற்தொழிலாளர் சங்கங்களின் அங்கத்தவர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

உலக உணவு ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடனேயே, இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (17)

# கல்வி நிர்வாக சேவையில் ஐயாயிரம் வெற்றிடங்கள்!

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையிலே ஐயாயிரம் வெற்றிடங்கள் இருப்பதாக, அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வண. யால்பெல பஞ்ஞாசேகர தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பதவிகளுக்கே இந்த வெற்றிடங்கள் நிலவுவதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கல்வி, மனிதவள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் -

கல்வி நிர்வாக சேவையில்லாத, இலங்கை அதிபர் சேவையிலுள்ள பலர் - வலயக் கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகிய பதவிகளை வகிப்பதாகவும், வண. யால்பெல பஞ்ஞாசேகர தேரர் மேலும் தெரிவித்தார்.

## லெப்.செல்லக்கிளி நினைவுநாள்

லெப்.செல்லக்கிளியின் 20 ஆவது ஆண்டு நினைவுநாள், நாளை திருநெல்வேலியில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உடபட பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# ஆங்கில அறிவு வளர்ச்சி மூலமே கணினித்துறையில் முன்னேறலாம்!

## நீதியமைச்சர் கே.எம். லொக்கு பண்டார கூறுகிறார்

இன்று உலகில் கணினித் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் பல்வேறு சாதனைகள் ஏற்படுத்தப்படுகின்றன. கணினித் துறையில் முன்னேறிய நாடுகள் - ஆங்கில அறிவின்மூலமே அந்த நிலையை எட்டின என்று, நிதியமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

ஏனைய வளர்முக நாடுகள் கல்வியில் முன்னேற்றம் கண்டிருப்பது போல, நாம் கல்வியில் முன்னேற்றம் காணவில்லை. எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில், கல்வியை மாணவர்களுக்குப் புகட்டவேண்டும்.

பாடசாலைகள் தோறும் அமைக்கப்பட்டுவரும் கணினிப் பயிற்சி நிலையங்களை, மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ச.பிரியங்கா
முகவரி : தும்பளை, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றார் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஈழவேந்தனின் கருத்துரை

தென்னிந்தியத் திருச்சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கருத்தரங்கு, நாளை பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப் படிப்புகள் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "ஈழத்தமிழினத்தின் வரலாற்றுப் பின்னணியும் இன்றைய நிலையும் எதிர்காலமும்" என்னும் விடயம் தொடர்பாக, மா.க.ஈழவேந்தன் கருத்துரை வழங்கவுள்ளார்.

## அலங்கார உற்சவம்

தென்புலோலி - மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம், கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து 17 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆடிப்பூரத் தினத்தன்று தீர்த்த உற்சவம் நடைபெறும். (17)

## விளையாட்டுப்போட்டி

(உடுவில்)

வலி.தெற்கு பிரதேசசபை நடாத்தும், சனசமூக நிலையங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

தாச்சிப்போட்டி - எதிர்வரும் 26 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு, இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (101)

## ஜி.ரி.இசற் பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள - வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஜீ.ரி.இசற் நிறுவனத்தால் கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளின் பயனாளிகளின் குழுத் தலைவர்களுக்கும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்குமான பயிற்சிப் பட்டறை, நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

## இலங்கை ஆசிரியர் சங்க செயற்பாட்டுக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 46 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

தலைமைப் பீடக் குழுவில் - சா. தியாகலிங்கம், ஸ்ரீ இரங்கநாதன் உட்பட ஐவரும், மத்தியகுழு உறுப்பினர் களாக - அ.பாலச்சந்திரன், த.சிவ புத்திரன், எஸ்.சந்திரமோகன் ஆகி யோரும் தெரிவாகியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத் தலைவராக சா.தியாகலிங்கமும், செயலாளராக அ.பாலச்சந்திரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## நெடுந்தீவு றோ.க.மாணவர்களுக்கு சத்துணவு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் தரம் 1 தொடக்கம் 5 வரைக்கும் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும், சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

இரு தவணைகளுக்கும் இச் சத்துணவினை வழங்கவென, நலன் விரும்பியொருவர் நிதியுதவியளித்துள்ளார். இச்செயற்பாட்டைப் பாடசாலை நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளனர். (113)

## மீனவர்களுக்கு கண்ணாடியிழை படகுகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்தொழிலாளர் சங்கமும், யு.என்.டி.பி. நிறுவனமும் இணைந்து, ஆறு மீனவர்களுக்குக் கண்ணாடி நாரிழைப் படகுகளைச் சுழற்சிமுறைக் கடனடிப்படையில் வழங்கியுள்ளது.

இப்படகுகளை மீனவர்களுக்குக் கையளிக்கும் வைபவம், கடந்த வியாழக்கிழமை மண்டைதீவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் -

கடற்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் யு.என்.டி.பி. நிறுவனத்தினரும் கலந்து கொண்டனர்.

## திரை விமர்சனம்

# காதல் கொண்டேன்




புதுமுகங்களின் நடிப்பை நம்பி எடுக்கப்பட்ட இந்தத் திரைப்படத்தின் கதை ஒன்றும் புதிதாக இல்லை. தான் விரும்பிய பெண் கிடைக்காவிட்டால் அவளைக் கடத்திச்சென்று, அவளுடன் வாழமுனையும் பாதை தவறிய கதைபோல இருக்கிறது 'காதல் கொண்டேன்'.

தனுஷ் - ஓர் அநாதை. கிறிஸ்தவ பாதிரியாரான நாகேஷால் வளர்க்கப்படுகின்றான். சென்னையிலுள்ள பொறியியல் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கிறது. கல்லூரிப் படிப்பில் தனுஷுக்கு ஆர்வம் இல்லை. பாதிரியாரின் நெருக்குதலால் சென்னை வந்தடைகிறான். அவனது வினோதமான நடை, உடை பாவனையால் அவன் சக நண்பர்களால் வினோதமாகவே பார்ககப்பட்டு ஒதுக்கப்படுகின்றான். ஒருநாள் யாரும் எதிர்பாராத வகையில், தன் திறமையைக் காட்டி, அனைவரையும் வியப்பிலாழ்த்துகின்றான். சகமாணவி சோனியா - இவனுடன் நட்புடன் பழக ஆரம்பிக்கிறாள். நெருங்கிய நட்புத் தொடர்கிறது. சோனியா தனது நண்பன் தனுஷை, தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று அவளின் பொலிஸ் அதிகாரியான தந்தைக்கு அறிமுகம் செய்துவைக்கிறாள். சோனியாவின் நட்பைக் காதலாக எண்ணி, தனுஷ் அவளைக் காதலிக்கத் தொடங்குகிறான். அதேசமயம், சோனியா மற்றுமோர் மாணவன் சுதீப்பைக் காதலிக்கிறாள். சோனியா தனது காதல் குறித்து எதார்த்தமாகத் தனுஷுடம் சொல்ல, வெளி வெறி கொள்கிறான் தனுஷ். சோனியாவைக் காட்டுக்குள் கடத்திச் சென்றுவிடுகிறான். உளப்பிறழ்வுக்காளான அவன் - தனது சிறுபிராய சம்பவங்களையும், அவள்மீது தான்கொண்ட காதலையும், அங்கு வைத்துக் கூறுகிறான். விரைவில் இருவரும் பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்படுகின்றனர். எதிர்பாராத சம்பவம் நடைபெறுகிறது. இதுவே படத்தின் கிளைமாக்ஸ் காட்சியும்கூட.

தனுஷ் புதுமுக நடிகரானாலும், நடிப்பு - முத்திரை பதிக்கிறது. வகுப்பறைக் காட்சிகளில் அப்பாவித்தனம், ஆசிரியர்களிடம் தண்டனை பெறுதல், கணித பாடத்தில் சிக்கலை விடுவிக்கும் கட்டம் என்பவற்றில் நடிப்புப் பிரமாதம். கிளைமாக்ஸ் காட்சியில் நண்பனையா அல்லது காதலனையா காப்பாற்றுவது என்ற இக்கட்டுநிலையில் சோனியாவின் நடிப்பும் சுமாராகவுள்ளது. இயக்குநர் செல்வராகவன் சிறந்த பங்களிப்பை வழங்கினாலும், கதாநாயகனின் சிறுபராயக் காட்சிகளில் அவதானம் எடுத்திருக்கலாம். பாடல்கள் வேகமாக உள்ளன. கதை புதிதாக இல்லாவிடினும், புதிய முகங்கள் தம்மாலியன்றதைச் செய்துள்ளனர்.



2004 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஒலிம்பிக் தீபத்தை, தெற்கு றோம் நகரத்தில் ஏற்றிவைத்து, பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் பார்வையிடுகிறார்.



உதைபந்தாட்டப் போட்டிகளில் பிறேசில் நாட்டவர்களுக்கு இருக்கும் தீராத ஆர்வம் எவருக்கும் புதிதான விடயமல்ல.

பிறேசில் உதைபந்தாட்ட அணி உலகக் கிண்ணப் போட்டிகளில் எப்போதுமே ஒரு எதிர்பார்ப்பிற்குரிய அணியாகவே இருந்து வருகிறது.

ஆண்கள் உதைபந்தாட்ட அணிகளுக்கு நாமும் என்ன சளைத்தவர்களா? என்று பிறேசில் பெண்கள் அணியும் களத்தில் இறங்கிவிட்டது.

பிறேசில் - கனடா பெண்கள் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் விராங்கனை நினற்றா அபாரேசிடா கோஸ்டா தோன்றும் காட்சி இது.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்



Strosek படத்திலிருந்து

(சென்றவாரத் தொடர்ச்சி)

**1975** ஆம் ஆண்டு வெளியான த எனிமா ஒவ் காஸ்பர் ஹௌஸர் (THE ENIGMA OF KASPAR HAUSER) படத்தின் கதாநாயகன் சமூகத்தால் வெறுக்கப்பட்டவன், ஒதுக்கப்பட்டவனும்கூட. ஹெர்ஸாக்கைப் பொறுத்தவரை, சமூகம் என்பது ஓர் ஒழுங்குக்கு உட்படாதது. ஆனால், அந்தக் கதாநாயகன் அப்படிக் கருதவில்லை. மாறாகத் தனது இயற்கையான, அனுபவம் நிறைந்த உண்மையான நடவடிக்கைகள்மூலம் நல்லவனாகவும், முக்கியமானவனாகவும், தன்னுடைய நல்ல செயற்பாடுகளின்மூலம் தன்னை வெளிப்படுத்துகிறான். காஸ்பர் என்கிற இந்தக் கதாபாத்திரம் மறக்க முடியாத ஒரு படைப்பு, காலத்தைக் கடந்து நிற்கிறது என்று கூறலாம்.

இம்மாதிரியான கற்பனைக் கதைகளை வழங்குவதன்மூலம், மக்களின் ஒவ்வொரு நாளைய அதிருப்தி மற்றும் மறுப்புகள் வாயிலாக ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற மற்றொரு மனிதன் திருப்தியடைகிறான். ஹெர்ஸாக்கின் பாத்திரப் படைப்புகள் மேற்குறிப்பிட்ட விடயத்தை வலுவாகவே நிறைவேற்றுகின்றன. சிலநேரம் வியப்புக்குரிய வகையில் அவை எல்லை கடக்கின்றன. தனது படங்களின் வெற்றிக்கான காரணத்தை அவரே இப்படிக் கூறுகிறார். "எனது படங்களை இரசிக்கிறார்கள். காரணம் - அவர்களின் மனோநிலை அந்த மாதிரியான ஒரு கட்டத்தில் உடைத்துக் கொண்டுபோகும் நிலையிலுள்ளது. என் படங்கள் அதற்கு ஒரு வடிகாலாக இருக்கக்கூடும். அவர்களது உளப்பாங்கு வெடித்துச் சிதறுவது என்பது, அவர்களுக்கே ஒருவேளை விருப்பமான காட்சிகளாக அமைந்திருக்கக்கூடும்" அதிகப்படியான உணர்ச்சி வெளிப்பாடுகளை நோக்கி, ஹெர்ஸாக்கின் படைப்புகள் வளர்நிலையிலேயே நகர்கின்றன. இந்தக் கணிப்பு ஆராய்ச்சி பூர்வமானதல்ல. ஏகாக்கிரக சிந்தனை வயப்பட்ட படைப்புகள்.



The Wrath of God படத்திலிருந்து

இவரது படைப்புகளின் கம்பீரத்தன்மைக்கும், பைத்தியக்காரத்தனத்துக்கும் எல்லையாக நூலிழையளவே வரையறை வகுக்கப்படுகிறது. வாழ்க்கை ஒருபோதும் மந்தமானதல்ல, அது போன்றுதான் ஹெர்ஸாக்கின் படங்களும்.

## வெர்னர் ஹெர்ஸாக்




Fitz carraldo படத்தில் ஒரு காட்சி




எயர் பிரான்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான கொன்கோட் விமானங்கள், இப்போது பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டன. இவ்வாறு பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட கொன்கோட் விமானம் ஒன்று, கப்பல்மூலம் றைன் ஆற்றுவழியாக ஜேர்மனியிலுள்ள காட்சிச்சாலை ஒன்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

# வெனிஸுக்கு வரும் வெள்ள ஆபத்து



உலக வெப்பம் அதிகரிப்பதால், கடல்நீர் மட்டம் உயர்வடைந்து வருகிறது. இதனால், முதலில் பாதிப்படையவுள்ள நாடாக, இத்தாலியின் நீர் நகரான வெனிஸ் விளங்குகிறது. வெனிஸ் நகரில் வீதிகளுக்குப் பதிலாக அங்கு ஆறுகளே இப்போது போக்குவரத்துக்குப் பயன்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வெனிஸ் நகரம் கடந்த 1500 ஆண்டுகளாக அட்ரியாட்டிக் கடலுடன் போராடி வருகிறது. தற்போது அந்த நகரினைக் கடல்மட்ட உயர்விலிருந்து பாதுகாப்பதற்கான திட்டமொன்றை, இத்தாலியப் பிரதமர் பெர்லோசினி ஆரம்பித்துள்ளார்.

நகரின் மத்தியிலுள்ள சென்.மார்க் சதுக்கம் வாரந்தோறும் வெள்ளப் பெருக்குக்கு உள்ளாகிறது. வெனிஸ் மக்கள் வெள்ள அச்சத்தால், இப்போது கீழ்த்தளங்களில் உறங்குவதில்லை என்கிறார் வெனிஸ் நகரவாசியொருவர்.

# ரொனால்டினோவுடன் பார்சிலோனா ஒப்பந்தம்





பிரேசிலின் பிரபல உதைபந்தாட்ட வீரர் ரொனால்டினோ (23) - பார்சலோனா அணியில் விளையாட ஒப்பந்தமாகியுள்ளார். இதுவரை இவர் பிரிட்டனின் மஞ்செஸ்டர் யுனைட்டட் அணியில் விளையாடி வந்தபோதிலும் பார்சலோனா அணி, ரொனால்டினோவை ஐந்து வருட ஒப்பந்தத்தில் தனது அணியில் இணைத்துள்ளது. இதற்காக அவருக்கு அந்தக் கழகம் வழங்கவுள்ள ஊதியம் 20 மில்லியன் பவுண்ஸ்.

ரொனால்டினோவைத் தனது அணியில் வைத்திருக்க மஞ்செஸ்டபர் யூனைட்டட் கடைசிவரை முயன்றபோதும், அது பலனளிக்கவில்லை.

# வைன் உற்பத்திக்கு செயற்கைக்கோள் உதவி

ஐரோப்பாவில் இனி வைன் உற்பத்திக்குச் செயற்கைக் கோள்களின் உதவி பெறப்படவுள்ளது. வைன் உற்பத்திக்கும் தேவையான திராட்சை மரங்கள் செழிப்பாக வளரக்கூடிய நிலப்பிரதேசங்களைச் செயற்கைக்கோளின் உதவிமூலம் கண்டறிந்து கூறும் திட்டமொன்றை, ஐரோப்பிய விண்வெளி நிறுவகம் ஆரம்பிக்கவுள்ளது.



நிலப்பகுதியின் தன்மையைக் கண்டறிந்து, அந்தப் பகுதியில் வளரக்கூடிய திராட்சை இனங்களைத் தெரிவதில், இனி விவசாயிகளுக்கு விண்வெளியிலிருந்து கிடைக்கும் தகவல்களும் உதவிசெய்யும் என, ஐரோப்பிய விண்வெளி நிறுவகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். புதிய இந்த முறையை நடைமுறைப்படுத்தினாலும், ஐரோப்பிய திர்ராட்சைச் செய்கையாளர்களின் பாரம்பரியமானதும், இரகசியமானதுமான வழிமுறைகளைக் கைவிடுமாறு ஒருபோதும் கோரப்போவதில்லை எனவும், அவர் கூறினார்.

இதேசமயம் திராட்சை காய்த்திருக்கும் வேளையில், அவற்றின் நிறம், பருமன் தொடர்பாக எடுக்கப்படும் செயற்கைக்கோள் படங்கள்மூலம், விவசாயிகள் தமது நிலத்தில் எப்போது அறுவடையை மேற்கொள்ளலாம் என முன்கூட்டியே திட்டமிடமுடியும் எனவும் கூறப்படுகிறது. மண் தன்மை, நிலத்தின் சாய்வு என்பனவும், திராட்சையின் சுவையைத் தீர்மானிப்பதால், இவை குறித்த துல்லியமான தரவுகளையும் செயற்கைக்கோள்கள் பெற்றுக்கொடுக்கும்.

# கரீபியன் பவளப்பாறைகள்; வந்துள்ளது ஆபத்து!

கடந்த 30 ஆண்டுகளில் கரீபியன் கடற்பகுதியிலுள்ள பவளப்பாறைகள் 80 வீதம் அழிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இயற்கை மற்றும் மனித செயற்பாடுகளே இவற்றின் அழிவுக்குக் காரணமாக இருக்கின்றபோதிலும், காலநிலை வேறுபாடு - பவளப்பாறைகளை அழிப்பதற்கான எந்த ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. சில இடங்களில் பவளப்பாறைகள் மீளவும் உருவாக ஆரம்பித்தாலும், அவை பழைய நிலையை அடையுமா என்பதே கேள்வி.



1975 ஆம் ஆண்டின்மூலம், இந்தப் பவளப்பாறை அழிவின் வேகம் குறையவில்லை என்று, 'சயன்ஸ் எக்ஸ்பிரஸ்' சஞ்சிகை கூறுகிறது. ஏற்கனவே பிரபல்யமான அவுஸ்திரேலியக் கடற்பகுதிகளில்- பவளப்பாறைகளும் அழிவடையும் ஆபத்துக்கு உருவாகிவருவது குறிப்பிடத்தக்கது.

# டொல்பின் விற்பனையில் மெக்ஸிக்கோ

பசுபிக்கடல் தீவான சொலமன் தீவுகளில் கைப்பற்றிய பெருமளவிலான டொல்பின் மீன்களை - 33 டொல்பின் மீன் இனங்களை மெக்ஸிக்கோ ஏற்றுமதிசெய்யத் திட்டமிட்டுள்ளது. எனினும், இந்த ஏற்றுமதியை நிறுத்துமாறு மிருகவதைத் தடுப்பாளர்கள், மெக்ஸிக்கோ அரசைக் கோரியுள்ளனர்.




டொல்பின் மீன் ஏற்றுமதி சட்டவிரோதமான நடவடிக்கை என, அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது. எனினும், இதை ஏற்க மெக்ஸிக்கோ மறுத்துள்ளது. தாம் அம்மீன்களைத் தவறாக நடத்தவில்லை என, மெக்ஸிக்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், கைப்பற்றிய பெருமளவிலான டொல்பின்களை ஒரு சிறு நீர்நிலைக்குள் வைத்துப் பேணப்படுவதனால், அவற்றுக்குச் சிரமங்கள் ஏற்படுவதாக - மிருகவதைத் தடுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். டொல்பின் மீன்களை வியாபார நோக்கில் இடத்துக்கிடம் நகர்த்தும்போது, அவை உள்ளகக் கடல் சேதத்துக்குள்ளாகலாம் என, விலங்குப் பாதுகாப்புக்கான உலகளாவிய கழகமும் எச்சரித்துள்ளது.

# ஜேம்ஸ் பொண்டுக்கு மகாராணி விருது

பிரிட்டிஷ் திரைப்படத்துறைக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக ஐரிஷ் நாட்டவரும், பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெற்றவருமான ஜேம்ஸ் பொண்ட்- திரைப்படங்களில் தற்போது அதிரடி நாயகனாக நடித்துவரும் பியர்ஸ் புரோஸ்னன், பிரிட்டிஷ் மகாராணியின் உயர் கௌரவவிருதைப் பெற்றுள்ளார். கடந்த சனியன்று அயர்லாந்து தலைநகர் டப்ளினிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர்களிடமிருந்து, இந்த விருதைப் பிரோஸ்னன் பெற்றுக்கொண்டார்.



தனது தாய் மற்றும் இரண்டாவது தந்தை மற்றும் பிள்ளைகளுடன் இணைந்து தனது விருதைப் பெற்றுக் கொண்ட புரோஸ்னன், இது தமக்கு மகிழ்ச்சிக்குரிய நாள் என்றார்.

ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரம்மூலம் பிரிட்டனின் பெருமையைப் புரோஸ்னன் உலகறியச் செய்துள்ளார் என, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக் ஸ்ரோ பாராட்டினார்.

அயர்லாந்தில் பிறந்து, சிறுபராயத்திலேயே பிரிட்டனுக்கு வந்த புரோஸ்னன் (50), லண்டனிலுள்ள நாடக அரங்கக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். 1995 இல் 'கோல்டன் ஐ' என்ற ஜேம்ஸ் பொண்ட் படத்தில் நடித்ததன் மூலம், இவரின் புகழ் பரவத்தொடங்கியது. தொடர்ந்து 1997 இல் 'ருமாரோ நெவர் டைஸ்', 1999 இல் 'வேர்ல்ட் இஸ் நொட் இன.்.ப்', கடந்த ஆண்டு வெளியான 'டை அதர் டே' போன்ற ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்கள் மூலம், இவர் புகழின் உச்சிக்குச் சென்றார்.


# பிரிட்டிஷ் பறவைகளில் புது இன வைரஸ்

பிரிட்டனின் பறவைகளில் பெருமளவில் வெஸ்ட் நைல் வைரஸ் என்ற நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளது. நுளம்புகள்மூலம் பரவும் இந்த நோய் - காலநிலை சாதகமான நிலையில், மனிதனுக்கும் பரவலாம் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். மனித மூளையை - இந்த வைரஸ் தாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டனில் இதுவரை இந்த நோய்த் தாக்கம் இல்லாவிடினும், கடந்த ஆண்டில் இந்த வைரஸினால், அமெரிக்காவில் 270 பேர் இறந்துள்ளனர்.



ஒக்ஸ்போர்ட்டிலுள்ள சூழலியல் நிலையத்தின் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில், சில பகுதிகளில் - பறவைகளில் இந்த வைரஸின் தாக்கம் மிக அதிகமாக இருப்பதாகவும், சுமார் 20 பறவை இனங்கள் இந்த வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன என்றும் தெரியவந்துள்ளது. பறவைகளில் இந்த வைரஸ்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியுள்ளதால், அவற்றுக்குப் பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும், மனிதனுக்குத் தொற்று ஏற்படும்போது, இதன் தாக்கம் அதிகமாக இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் பறவைகளினாலேயே இந்த வைரஸ் பிரிட்டனுக்குள் வந்ததாகக் கருதப்படுகிறது.

# அங்கும் ஒரு இடப்பெயர்வு



லைபீரியாவில் ஏற்பட்டுள்ள யுத்தநிலையால், அகதிகளாக வெளியேறும் மக்களில் ஒரு தொகுதியினரையே படத்தில் காண்கிறீர்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உதவி வரைத்துஅன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து.*

- திருக்குறள்

# நமது நோக்கு

## அவசரம் வேண்டாம் ; அச்சமின்னும் அகலவில்லை!

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அகதிகளாகப் புலம்பெயர்ந்து சென்றவர்களை மீளத்திருப்பியனுப்புவதற்கான முயற்சிகளை, சில மேற்கு நாடுகள் மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது. அதேவேளை - தமது குடிவரவுக் கட்டுப்பாடுகளிலும் இறுக்கத்தைக் கொண்டு வரவும் அதே நாடுகள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

குறிப்பாக - பிரிட்டிஷ் அரசு, இலங்கையைப் பொறுத்தளவிலும் தனது குடிவரவுக் கொள்கைகளில் திடீர் மாற்றங்களை முன்னெடுப்பதான போக்கை அவதானிக்க முடிகின்றது.

இம்மாத ஆரம்பம் முதலாக - பிரிட்டனுக்கு அகதி அந்தஸ்து கோரி நுழையும் இலங்கையர் மீது - அந்நாட்டு குடிவர்வு, குடியகல்வு அதிகாரிகள், கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் -

இதன் ஒரு கட்டமாக - அண்மையில் பிரிட்டனில் தஞ்சம் கோரும் நோக்கில், விமான மூலம் வந்த ஏழு இலங்கைத் தமிழர்களை - பிரிட்டனின் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள், விமானத்தில் வைத்தே திருப்பியனுப்பியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க - இலங்கையிலிருந்து பிரிட்டிஷ் விசாவுக்கு விண்ணப்பிப்போரின் கைவிரல் அடையாளங்கள் மட்டுமல்ல, இனி முக அடையாளங்களும் பதிவு செய்யப்படுமென - கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் தனது குடிவரவுக் கொள்கைகளை இறுக்குவதும், அதில் புதிய நடைமுறைகளை அமுலாக்குவதும் அதனது உரிமையென்றாலும் -

பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பியனுப்புவதற்கு அந்நாடு தீவிரம் காட்டுமானால் - உண்மையில் அது மனிதாபிமானமற்ற நடவடிக்கையாகவே அமையுமென்பது உறுதியானது.

ஏற்கனவே - ஐரோப்பிய யூனியனில், பிரிட்டனின் குடிவரவுக் கொள்கைகள் பலமான விமர்சனங்களுக்குட்பட்டு எதிர்ப்புக்கள் தோன்றியிருக்கின்ற நிலையில் - இலங்கைத் தமிழர்களை, அவர்களது விருப்பத்திற்கு மாறாக பிரிட்டனிலிருந்து திருப்பியனுப்ப அந்நாடு முனையுமானால், அது- பிரிட்டனின் மனிதாபிமான நிலைப்பாடு பற்றிய தார்மீக நியாயத்திற்கு எதிரானதாகவே அமையும்.

இலங்கையில் இன்னமும் - உறுதியான சமாதானம் ஏற்பட்டுவிடாதபோது, தமிழ்மக்களுக்கு போரிலிருந்து மீண்ட சுமுகவாழ்வு இன்னமும் சாத்தியப்படாதபோது- தஞ்சமடைந்துள்ள தமிழ்மக்களை பிரிட்டனிலிருந்து வெளியேற்ற முயற்சிப்பது - மனித அவலத்திற்கே வழிகோலும் என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் புரிந்துகொள்ளாமலிருப்பது துர்ப்பாக்கியமானதாகும்.

அதிலும் - பிரிட்டிஷ் தூதுவர் முதலாக அந்நாட்டின் உயரதிகாரிகள் வரை - வட-கிழக்கிற்கு நேரடியாகப் பல தடவைகள் விஜயம் செய்திருந்தும் - களநிலையை நன்குணர்ந்திருந்தும், பிரிட்டிஷ் அரசு இதுபோன்ற மனித நேயமற்ற செயல்களில் இறங்குமானால் - அதன் உள்ளார்த்தம் தமிழ்மக்கள் மனதில் சந்தேகங்களையே விதைக்கச் செய்யும்.

உள்ளூரில் இடம்பெயர்ந்து, அகதிமுகாம்களில் வாழும் மக்களே, தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்றபோது - வெளிநாடுகளிலிருந்தும் அகதிகள் திருப்பியனுப்பப்படுவதென்பது, எந்தவகையில் பொருத்தமானதென்பதை - பிரிட்டிஷ் அரசும் சரி, அகதிகளைத் திருப்பியனுப்ப முயற்சிக்கின்ற ஏனைய நாடுகளும் சரி கருத்திலெடுக்க வேண்டும்.

தங்களது நாட்டிலுள்ள அகதிகளைத் திருப்பியனுப்ப முயலும் நாடுகள் - வேண்டுமானால், அகதிகள் திரும்பக் கூடிய ஏதுநிலையை இங்கே உருவாக்குவதற்கு முதலில் முயற்சித்துப் பார்க்கலாம்.

சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்கான முதலடியைக் கூட எடுத்துவைக்கப் பின்னடித்து நிற்கும் கொழும்பு அரசாங்கத்திற்கும், சாண் ஏற முழம் சறுக்க வேண்டுமெனத் தீவிரம் காட்டிநிற்கும் தென்னிலங்கை அரசியற்சக்திகளுக்கும் - உரிய அழுத்தங்களைத் தந்து -

தமிழர் தாயகப் பகுதிகளில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் குறிப்பிட்ட நாடுகள் சாதித்துக்காட்டுமானால் - அவை, அந்தக் கட்டத்தில் அகதிகள் விவகாரம் பற்றிப் பேசத் தொடங்கலாம்.

அவ்வேளையில் கூட - கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், அமைதி முயற்சிகள் நீர்த்துப்போகவும், தமிழினம் ஏமாற்றப்படவுமான நிகழ்வுகள் நடந்தே வந்துள்ள வரலாற்று உண்மையின்பேரில் -

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு வரும் வரையில் - இலங்கையில் தமிழினத்தின் எதிர்காலமென்பது, தென்னிலங்கைக் கருமேகங்களால் சூழப்படும் அபாயத்தின் யதார்த்தத்தை - அகதிகளைத் திருப்பியனுப்ப முயலும் நாடுகள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எனவே - இதுவரை காலமும் - கொடியபோரின் வதைகளிலிருந்து தப்பித் தஞ்சம் புகுந்த மக்களை அரவணைத்து, ஆதரவு காட்டிய நாடுகள் - தமது உயரிய பண்பை திடீர் முடிவுகளால் சிதைத்துவிடாது,

மனிதநேய அடிப்படையிலும், இலங்கையின் கள யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதன் வகையிலும், சிந்தித்து நிதானமாகச் செயலாற்ற வேண்டுமென்பதே, தமிழினத்தின் எதிர்பார்ப்பும், வேண்டுகோளுமாகும்.

# உடன்பாட்டை ரத்துசெய்ய கோருபவர்கள் அதன் விளைவுகளையும் உணர வேண்டும்!

## பொலனறுவையில் பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு கோருபவர்கள், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மாற்றுயோசனைகளையும் தெரிவிக்க வேண்டும் என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலனறுவ மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைக்கும் செயற்திட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச்செய்தால், நாட்டில் மீண்டும் பாரிய யுத்தம் வெடிக்கும். யுத்தம் தொடங்கினால், நாடு கடனாளியாகிவிடும்.



புரிந்துணர்வு - போர்நிறுத்தம் கடந்த ஆறு மாதங்களாக நடைமுறையில் இருப்பதால், பெருமளவிலான பொருள் மற்றும் சொத்து அழிவுகள் ஏற்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகம் குறித்த, அவர்களின் பதில் இரண்டு வாரங்களில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது எனவும், பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார்.

# வட - கிழக்கு இணைந்த தீர்வு காணத்தவறின் நாடு பிளவுபடுவதை எவராலும் தடுக்கமுடியாது!

## அதாவுல்லாவுக்கு சந்திரநேரு எம்.பி. பதிலடி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமென அமைச்சர் அதாவுல்லா கருத்து தெரிவித்திருப்பது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் செயலாகும். வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்களான தமிழ் - முஸ்லிம் மக்களது பிரிக்கமுடியாத தாயகப் பிரதேசம் என்பது, தந்தை செல்வா முதல் தமிழ்மக்களது தேசியத்தலைவர் வே.பிரபாகரன் வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடாகும்.

இரண்டு சிறுபான்மை இனங்களையும் கூறுபோட்டு, பேரினவாதிகளுக்குத் துணைபோகும் சக்திகளை மக்கள் இனங்காணவேண்டும் என்று, அம்பாறை மாவட்டத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தெரிவித்தார்.

அவர் இது குறித்துத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த 16 வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைந்துள்ளது. இதனை நிரந்தரமாக இணைக்கவேண்டுமென்றே போராடி வருகிறோம். இந்த நிலையில், இதைப் பிரிக்க வேண்டுமெனக் கோருவது தமிழ்-முஸ்லிம் மக்களைக் கூறுபோடுவதற்கே வழிவகுக்கும்.

பேரினவாதிகள், சிறுபான்மை இனங்களான தமிழ் - முஸ்லிம் மக்களைக் கூறுபோட்டு, தமது நலன்களைத் தக்கவைக்க முயல்கின்றனர். தற்போது உட்கட்சி முரண்பாடுகளால் சின்னாபின்னப்பட்டிருக்கும் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள், தம்மைத் தக்கவைப்பதற்காக இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாகப் பிரிக்கமுடியாத ஒற்றுமையுடன் வாழ்ந்து வருவதுடன், தமிழ்மக்களோடு உரிமைகளைப் பகிர்ந்து வாழவே விரும்புகிறார்கள். ஆனால், இரு இனங்களையும் கூறுபோட்டு, பதவி சுகங்களைப் பெறவிரும்பும் சக்திகளே, வெறும் உணர்ச்சிக்கு அடிமையாகும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரித்து, தீர்வு காண்பது என்பது கற்பனையில்கூட நினைத்துப் பார்க்கமுடியாத கூற்றாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தம்மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை அமைப்பின்மூலம் அரசியற்பிரவேசம் செய்த அதாவுல்லா போன்றோர் தமது சுயநலன்களுக்காகப் பதவிகளைத் தக்கவைக்க உதவுமென்பதற்காகக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

வடக்கு - கிழக்கை இணைத்துத் தீர்வு காணத்தவறின், இந்த நாடு பிளவுபடுவதை எந்தசக்தியாலும் தடுக்கமுடியாது என்ற யதார்த்தத்தை, வடக்கு - கிழக்கை மையமாகக்கொண்டு செயற்படும் அரசியல்வாதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும், அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு தெரிவித்துள்ளார்.

# அடுத்தவருடம் முதல் பாடத்திட்டத்தில் ஒழுக்கம் குறித்த பாடநெறி அறிமுகம்!

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அடுத்தவருடத்திலிருந்து ஒழுக்கம் தொடர்பான பாடநெறியைப் பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு, கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

ஆண்டு ஆறுமுதல் ஆண்டு பதினொன்று வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, இந்த ஒழுக்கம் தொடர்பான பாடநெறியைக் கற்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

முன்னர் இந்தப் பாடநெறி, பாடத்திட்டத்திலிருந்தபோதும், பின்னர் இது நீக்கப்பட்டது. ஆனால், மீண்டும் பாடத்திட்டத்தில் இந்தப் பாடநெறியைச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பாடநெறியில் - இலங்கையின் சமூக அமைப்பு, வரலாறு, சமூக ஒழுக்கம், பொறுப்பு, கடமை என்பன உள்ளடக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

மேலும், கல்வியில் கவனம் செலுத்தப்படாததால் - கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்திபெறாத மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாகவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# அத்துமீறுகின்ற தமிழக மீனவர்களை இந்திய அரசு கட்டுப்படுத்தவேண்டும்!

## மன்னார் ஆயர் கோரிக்கை

(மன்னார்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி - தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதை இந்திய அரசாங்கம் கட்டுப்படுத்தவேண்டும் என்று, மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் கோரியுள்ளார்.

மன்னார் கடற்பகுதிக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி, மீன்பிடிப்பதனால், மன்னார் மாவட்ட மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனால், இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதைத் தடுக்க, இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார் - மடு வீதி மக்களின் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளமை, மனித உரிமை மீறலாகும் என்றும் மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார்.

மடு வீதி - மக்களின் போக்குவரத்துக்குப் படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், மடு தேவாலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்கள் மட்டுமே இந்தப் பாதையூடாகச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வன்னி அபிவிருத்தித் திட்டங்களில் 4.3 கோடி ரூபா செலவிடப்படும்!

## வவுனியா அரசாங்க அதிபர் கணேஷ் தகவல்

(வவுனியா)

வன்னிப் பகுதியில் - நான்கு கோடி முப்பது இலட்சம் ரூபா செலவிலான இருநூற்றுநாற்பது அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டத்துக்கு அமைவாக, முப்பத்தைந்து கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்த நிதியிலிருந்து முப்பத்தைந்து புதிய கட்டடங்கள் அமைக்கப்படும். அத்துடன், சுமார் 140 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படும்.

வன்னிப் பகுதியிலுள்ள 75 குளங்களும் இத்திட்டத் திற்கமையப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், சுயவேலை வாய்ப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக எண்பத்தாறு இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது எனவும் வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.


# அமெரிக்கப் போர்க் கப்பலின் வருகை; பின்னணியிலுள்ள மர்மங்கள் என்ன?

கடந்தமாதம் அமெரிக்கப் போர்க்கப்பல் **USS O' kane**, கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டதான செய்திகளை நீங்கள் கவனித்திருக்கலாம். அதேபோல, சென்ற வருடமும் இரு அமெரிக்கப் போர்க்கப்பல்கள் - வேறு வேறு காலப்பகுதிகளில், கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிட்டதைக்கூட, ஞாபகத்தில் வைத்திருக்கலாம்.

மகா ஆச்சரியமான இந்தச் சம்பவங்கள் பற்றி - சர்வதேச **Media** களில் பெரிதாகக் கதை அடிபடவில்லை என்பதற்குக் காரணம், **Media** காரர்களின் கவனம் எல்லாம் **Middle East** இல் இருந்ததாக இருக்கலாம்.

**International Media** எப்படியாவது போகட்டும். இலங்கையைப் பொறுத்தவரை அமெரிக்கப் போர்க்கப்பல்கள், கொழும்புவரை எட்டிப் பார்ப்பது கொஞ்சம் சீரியஸான விடயம்.

காரணம்- அமெரிக்கர் ஆதாயம் இல்லாம



USS O' kane,

லேயே எதுவும் செய்யமாட்டார்கள் என்பது ஒன்று. இலங்கை அரசு சமீபகாலங்களில் மிக அதிகமாக உச்சரிக்கும் பெயர் அமெரிக்காதான் என்பது, மற்றையது.

அத்துடன், அமெரிக்காவும் சமீபகாலங்களில் இலங்கை விவகாரங்களில் கொஞ்சம் அதிகமாகவே அக்கறை காட்டிவருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பே அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளில் சில தடங்கல்கள் ஏற்பட்டபோது, அரச தரப்பிலிருந்து கூறப்பட்ட **Comments** களில் ஒன்று, ஒருவேளை பேச்சுவார்த்தை முடிவடைந்து, இராணுவரீதியான தீர்வொன்றுக்குச் செல்லும் கட்டாயம் ஏற்பட்டால், அரசுக்கு அமெரிக்க உதவி கிடைக்கும் என்பதாகும். இதிலும் அமெரிக்காவின் பெயர் வருகிறது. உள்ளே விடயம் இல்லாமல், வெளியே கதை வராது.

இவை எல்லாவற்றிலும் இருந்து தெரிய வருவது ஒன்றுதான். அது அமெரிக்கத் தலையீடு - இலங்கை விவகாரத்தில் ஏதோவொரு விதத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, விரும்பியோ, விரும்பாமலோ இருக்கப்போகிறது என்பதே.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் வெளிநாட்டு இராணுவக் கொள்கைகளில், இந்தியத் துணைக்கண்ட நாடுகள் பற்றிய நிலைப்பாடு - அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாடு கொஞ்சம் இறுக்கமாகவே இருக்கவேண்டும் என்பதே. இதற்கு அமெரிக்காவுக்குத் தேவை ஒரு சத்தமில்லாத களம்.

இது அமையவேண்டிய ஆசிய நாடுகளில், அமெரிக்காவுக்கு இருக்கும் தெரிவுகள் - இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை அல்லது மாலைதீவு.

இவற்றுள் இந்தியா வெளிப்படையாகவே அரசியல்ரீதியான களம் அமைக்க, அமெரிக்காவுக்கு இடமளிக்காது.

பாகிஸ்தான் இதற்குத் தலைகீழ். வெளிப்படையாக இடங்கொடுக்கும், தளம் அமைக்க. ஆனால், முஸ்லிம் அமைப்புகளுடன் அங்கதத் தேவை உறவை அது வைத்திருக்கும்.

பங்களாதேஷ், நேபாளம் ஆகிய இரு நாடுகளிலும் மறைமுகமாக இந்திய உளவுப் பிரிவும், பாகிஸ்தான் உளவுப் பிரிவும் பல காலமாகவே ஆளையாள் குழிபறிக்கும் வேலைகளைச் செய்துவருவதால் - அமெரிக்கா மூக்கை நுழைத்தால் **Cross fire** இல் மாட்டிக் கொள்ளும்.

மாலைதீவைப் பொறுத்தவரை - அது, இராணுவ ரீதியாக இந்தியாவை நம்பியிருக்கும் ஒரு நாடு. அத்துடன், நாடு மிகவும் சிறியது. அமெரிக்காவின் **Military Operation** களுக்கு.

இவையெல்லாவற்றையும் தவிர்த்துப் பார்த்தால், அமெரிக்காவுக்கு வசதியான அருமையான இடம் இலங்கை.

ஏனென்றால், முதலாவது - உள்நாட்டுப் போர் இருந்தாலும், வெளிநாட்டுத் தலையீடு இராணுவரீதியாக இங்கில்லை.

இரண்டாவது - மிக அருகருகே இருக்கும் இரண்டு ஆழ்கடல் துறைமுகங்கள் - கொழும்புத் துறைமுகமும், திருகோணமலைத் துறைமுகமும்.

மூன்றாவது - அமெரிக்காவின் **Major Operations** நடக்கும் **Middle East** இற்கும் அமெரிக்கா கடல் வழியில் கவனம்செலுத்தும் பசுபிக் சமுத்திரத்துக்கும் நடுவே இருக்கும் புவியில்ரீதியான **Location.**

நான்காவது - எந்தவொரு முஸ்லிம் நாடும் தரைவழியாக இணைக்கப்படாத வசதி அல்-கெய்டாவோ, வேறு முஸ்லிம் அமைப்புக்களோ அமைப்புரீதியாகப் பலம்பெற்ற நாடு.

ஐந்தாவது - வெளிநாட்டு உதவி, அத்தியாவசியமாக எதிர்பார்க்கும் உள்நாட்டுப் பொருளாதாரம்.

ஆறாவது - காலங்காலமாக அமெரிக்க ஆதரவுப் போக்குடைய அல்லது **atleast,** அமெரிக்காவை எதிர்க்காத போக்குடைய அரசாங்கம்.

இவ்வாறு வசதி வாய்ப்புக்களுடன் ஒரு நாடு கைக்கெட்டிய தூரத்தில் இருந்தால், யார்தான் அதில் கைவைக்காமல் விட்டுவிடுவார்கள்? அமெரிக்காவும் கைவைக்கப் பார்க்கலாம்.

ஆனால், இது என்ன 19 ஆவது நூற்றாண்டா? ஒரு நாடு, படைபலத்தை உபயோகித்து - மற்றுமோர் நாட்டுக்குள் குதிரைப் படையுடன் போய் அமர்ந்து கொள்வதற்கு.

இன்றைய சூழ்நிலையில்- அப்படியான எளிதான, ஆக்கிரமிப்பு - சாத்தியமில்லாத நிலையில், பற்பல அமைப்புகள் குறுக்கே வருவார்கள் என்பதால், இதையும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போலச் செய்யவேண்டியிருக்கிறது.

இதில், வாழைப்பழம் - கண் வைக்கப்பட்டுள்ள நாடு என்றால், ஊசி - இருதரப்பு உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள்.

கடந்த வருடமே இப்படியான ஒப்பந்தம் ஒன்றை - அமெரிக்கா, இலங்கை அரசுடன் சத்தமில்லாமல் செய்து முடித்திருக்கிறது சட்டரீதியாக.

இந்த உடன்படிக்கை பற்றிப் பலர் கேள்விபட்டிருப்பீர்கள். இரு நாடுகளுக்கிடையிலேயே, இரு வாணிபங்களுக்கு இடையில் செய்யப்படும் சட்டரீதியான ஒப்பந்தம். பொருட்களையும், சேவைகளையும் கொடுத்துவாங்கும் ரீதியில் - கொஞ்சம் பழைய காலப் பண்டமாற்றுப் போல.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து பார்த்தால் - இலங்கை அரசு ஒரு மேற்கு வல்லரசுடன் செய்துகொண்ட, முதலாவது ஆழமான ஒப்பந்தம் இதுதான் - கடந்த ஆண்டு கையொப்பமிடப்பட்டது.

ஆரம்பத்தில் இரகசியமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை, வெளியுலகுக்குப் பகிரங்கப்படுத்தியது **Media** களுக்குக் கசிந்து, தெரிய வந்த தகவல்கள்தான். அதன்பின்பு, விடயம் ஒரளவுக்கு வெளியேவந்த நிலையில் - அமெரிககாவும், இலங்கை அரசும் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றி ஒப்புக்கொண்டார்கள். இவையெல்லாம் பழைய கதை. இப்படி இரு பகுதியினரும் விடயத்தை ஒப்புக் கொண்டவுடன், எதிர்க்கட்சிகளும், அரசியல் விமர்சகர்களும் விடுவார்களா? இவர்களும் ஆளாளுக்கு இந்த ஒப்பந்தத்தைக் கையிலெடுத்துக் கிழிக்கத் தொடங்கினார்கள்.

ஆனால், இதிலுள்ள சோகம் என்னவென்றால், ஆளாளுக்கு ஒப்பந்தம் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல், ஏதோ ஏகாதிபத்தியம், வல்லரசு, நசுக்கல், ஒடுக்கல், துவைத்தல் என்று வாயினுள் நுழையாத சொற்களை வைத்து எதிர்ப்புத் தெரிவித்ததோடு சரி, அதற்குப் பின்பு, எல்லோரும் தங்களது அடுத்த நிலையைக் கவனிக்கப் போய்விட்டார்கள்.

எதிர்க்கட்சிகளும் இதை மறந்துவிட, பத்திரிகைகளும் மறந்துவிட, மக்களும் மறந்துவிட்டு அடுத்த **Show** சிநேகா சினிமா பார்க்கப் போய்விட, திரை இறங்கிவிட்டது சுபம், வணக்கம், **Chapter close**.

இப்போது - கடந்தமாதம், அமெரிக்கக் கப்பல் **USS O' kane** சாவகாசமாகக் கொழும்புத் துறை முகத்துக்குள் நுழைந்து நங்கூரமிட்ட போதுதான், ஒரு சிலருக்கு அமெரிக்கப் போர்க் கப்பல் என்ன இந்தப் பக்கமாக வருகிறது என்று தோன்றியிருக்கும்.


அதிலும் மிகச் சிலருக்குத்தான் ஆகா, இது கடந்தவருடம் அமெரிக்காவும், இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் இரண்டாவது அத்தியாயம் என்று புரிந்திருக்கும்.

பெரும்பாலானவர்களுக்கு அமெரிக்கக் கப்பல் வந்தது தெரியாமல், மானிப்பாய் பஸ் **Route** மாறி மல்லாகம் **Halt** வந்து நின்றுவிட்டுப்போவது போன்றிருக்கும்.

ஆனால் விடயம், மானிப்பாய் பஸ்போல அவ்வளவு சாதாரணமான விடயமல்ல. விடயம் கொஞ்சம் **Serious** ஆனது.

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துபோன மூன்று கப்பல்களும் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை. எரிபொருளை நிரப்பியதும், கப்பலில் இருந்தவர்களுக்குச் சிலதினங்கள் ஓய்வு கொடுத்ததும் என்று, தன்பாட்டுக்குச் சிவனே என்று இருந்து விட்டுப்போனவையே

ஆனால், இது கதையின் முடிவல்ல. வெறும் ஆரம்பம்தான். இனிமேல்தான் கதையில் வில்லங்கம் வரலாம். இது, அமெரிக்காவுக்கு அத்தியாவசியமாகும் பட்சத்தில் அதைப்



கப்பலில் அமெரிக்கப்படையினர்

புரிந்து கொள்ள வேண்டுமென்றால், முதலில் இரண்டு விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒன்று - அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம்.

இரண்டாவது - வந்துசெல்லும் அமெரிக்கக் கப்பல்களின் **Capacity or Facility**.

இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான அணுகுமுறைகள். ஒன்று அரசியல் நிர்வாகம் சம்பந்தப்பட்ட அணுகுமுறை - ஒப்பந்தங்கள் பற்றியது.

## ரிஷி

மற்றையது - இராணுவ பலாபலன்கள் சம்பந்தப்பட்டது, ஆயுத சமனிலை பற்றியது. இதிலுள்ள ஒரேயொரு சிக்கல் - அரசியல் நிர்வாகம் பற்றி உரக்கச் சொல்பவர்கள், ஆயுதச் சமனிலை பற்றிப் பேசுவதில்லை.

ஆயுதங்களைப் பற்றிச் சொல்பவர்கள் - நிர்வாகம் பற்றியோ, ஒப்பந்தம் பற்றியோ மூச்சுவிடுவதில்லை. ஏதோ எங்களால் முடிந்தது - சுண்டல்போல இரண்டையும் ஒன்றாகத் தாழித்துத் தருகிறோம் - வேறுவேறு கோணங்களில் அல்லது அணுகுமுறைகளில்.

முதலில் கொழும்புத் துறைமுகம்வரை வந்துபோன அமெரிக்கக் கப்பல் **USS O' Kane** பற்றிப் பார்க்கலாம்.

**O' Kane** அமெரிக்கக் கடற்படையின் இளமையான கப்பல்களில் ஒன்று. மார்ச் மாதம் 28 ஆம் திகதி 1998 முதல் **US Navy** ஆல் இயக்கப்பட்டு வருகின்ற, **Private Missile distroyer** வகையிலான கப்பல். அமெரிக்கக் கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 27 ஆவது ஏவுகணைமூலம் தாக்கியழிக்கும் கப்பல். தயாரிப்பு **Wartime Works** நிறுவனம். விலை, சுமார் 900 மில்லியன் டொலர். அதன் தாயகம் **Perl Harbour** துறைமுகம் - ஹவாய்.

மத்திய, நடுத்தர அளவிலான யுத்தக் கப்பல்களின் அமைப்பு, இயக்கம் போன்றவற்றுக்கும **USS O' kane** இற்கும் வித்தியாசம் பெரிதாக இல்லை என்றும், மிகப்பெரிய வித்தியாசம் அல்லது **Advantage** இதில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்களும், யுத்த உபகரணங்களும்.

தொழில்நுட்பரீதியாக மிகவும் **Advanced** ஆன சில சமாச்சாரங்கள் **USS O' kane** இல் இருப்பதுதான் இதன் **Highlight**. அப்படி என்னதான் இருக்கின்றன? அமெரிக்காவின் இந்த **Private Missile Distroyer** இல்?

**O' Kane** ஒரு **Aircraft Carrier** அல்ல. அதாவது, அதில் போர் விமானங்கள் இறக்கப்படுவதோ, நிறுத்தப்படுவதோ இல்லை. ஆனாலும், கப்பலின் மேற்தளத்தில் **Electronic** உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால், **O' Kane** இன் மேற்தளத்தில் ஹெலிகொப்ரர்களினை இயக்கமுடியும், இறக்கமுடியும். அதற்கேற்றவகையில் கப்பலின் மேற்தளம் கொஞ்சம் நீளம் அதிகமானது.

**O' Kane** இல் பொருத்தப்பட்டுள்ள யுத்த உபகரணங்கள் என்று பார்த்தால், அவற்றில் முக்கியமானவை -

முதலாவது - **VLS - Vertical Launching System.**

இரண்டாவது - **Tomahok** வகை ஏவுகணைகளை ஏவக்கூடிய **Launchers.**

இது எந்தளவு முக்கியமானவை அல்லது எந்தளவுக்கு உபயோகப்படக்கூடியவை, அதைத தெரிந்துகொள்ள - அவை பற்றிச் சில விளக்கங்கள்.

**VLS** என்பது - **Vertical Launching System. O' Kane** இல் இருக்கும் **VLS** இன் **Model Mark** 41 ரகத்திலானது. இது கொஞ்சம் ஆசியாவுக்குப் புதியரகம். அத்துடன், கிட்டத்தட்ட எந்தவகையான யுத்தத்துக்கும் பயன்படுத்தமுடியும்.

**Anti Aerial Warfare** விமான எதிர்ப்பு யுத்தம். **Anti Supmarine Warfare** - நீர்மூழ்கி எதிர்ப்பு யுத்தம். **Ship Self defensive** -கப்பல் தற்பாதுகாப்பு யுத்தம் என்று எங்கெங்கும் கனகச்சித்தமாக உபயோகப்படுவது மார்க் 41.

(தொடரும்)

# வவுனியாவிலிருந்து 250 பொலிஸார் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றனர்!

வவுனியாவில் கடமையாற்றி வந்த 250 பொலிஸ் உத்தியோகத்தர்கள், கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக - வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரிலேயே, இந்த இடமாற்றம் செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே, இந்த இடமாற்றங்கள் இடம்பெற்றதாகவும், 20 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் 20 பொலிஸ் சார்ஜண்ட்கள் உட்பட 250 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# புலமைப் பரிசில் கருத்தரங்குகள் தெரிவுசெய்த பாடசாலைகளில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வித்திணைக்கள அனுசரணையுடன், மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகன் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்குகளை நடாத்தவுள்ளார்.


இன்று - ஆனைப்பந்தி ஆரம்பப் பாடசாலையிலும், நாளை - யாழ்.இந்து மகளிர் பாடசாலையிலும், 24 ஆம் திகதி - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும், 25 ஆம் திகதி - காரைநகர் இந்து ஆரம்ப பாடசாலையிலும் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், பங்குபற்றும் மாணவர்களுக்கு, கையேடுகளும் மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் ஏனைய பாடசாலைகள், கருத்தரங்கு நடைபெறவுள்ள பாடசாலைகளின் அதிபர்களுடன் தொடர்புகொள்ளுமாறு மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பக்தாத்தில் மீண்டும் அதிரடி

# அமெரிக்கச் சிப்பாய் மரணம்!




பலியானவருக்கு அஞ்சலி

வடபக்தாத்தில் நேற்று நடைபெற்ற தாக்குதலில்- ஒரு அமெரிக்கப் படைச்சிப்பாயும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் கொல்லப்பட்டனர். இவர்கள் சென்ற வாகனம், கிளைமோர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதில்- இவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குர்திஷ் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதலில் - இரண்டு அமெரிக்கப்படையினர் பலியாகி 24 மணிநேரத்தில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. ரொக்கெட் தாக்குதல், கிளைமோர் தாக்குதல்,' கைக் குண்டுவீச்சு என்பன, பக்தாத்தில் நாளாந்தம் அமெரிக் கப்படையினர் மீது நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்ப டுகிறது. கவச வாகனங்கள் மீது வீதியோரமாக வைத்து குண்டுத்தாக்குதலை நடத்திவிட்டு, பின்னர் தப்பியோடும் அமெரிக்கப்படைகளை - சிறுரக ஆயுதங்கள் கொண்டு தாக்குவதே, ஈராக்கியர்களின் புதிய பாணியாக இருக் கிறது. தற்போது ஈராக்கில் - சலிப்பைத்தருகின்ற கெரில்லாத் தாக்குதல்களை எதிர்நோக்க வேண்டியி ருப்பதாக, அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவித்த னர்.

கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் நடைபெறும் அதிரடித் தாக்குதல்களினால், இதுவரை 35 அமெரிக்கப்படையினர் பலியானதாக, அமெரிக்க இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.



பக்தாத்தில் ரொக்கட் தாக்குதலினால் நடுவீதியில் எரிந்து சாம்பரான அமெரிக்க இராணுவ வாகனத்தைப் படத்தில் காணலாம்.

# கெலியின் மரணவிசாரணை பகிரங்கமாகவே நடக்கும்!

## நீதிபதி அறிவிப்பு



டேவிட் கெலி

மர்மமான முறையில் மரணமடைந்த பிரிட்டிஷ் அணு ஆயுத விஞ்ஞானக் கலாநிதி டேவிட் கெலியின் வழக்கை விசாரித்துவரும் நீதிபதி, விசாரணை கள் எவ்வகையில் கொண்டு செல் லப்படவேண்டும் என்பதை - தாமே தீர் மானிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள் ளார். விரைவுபடுத்தவேண்டிய இந்த வழக்கைப் பகிரங்கமாகவே நடத்த விரும்புகிறேன் என அந்த நீதிபதி தெரிவித்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கு - அரசு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது என, நீதிபதி குறிப்பிட்டார்.

## பிரிட்டன் - கிளாஸ்கோ நகரப் பகுதியில்

# பொலிஸ் கொன்ஸ்டபிள் மீது துப்பாக்கிச் சூடு: 4 பேர் கைது!

(லண்டன்)

பிரிட்டனின் - கிளாஸ்கோ நகரப் பொலிஸ் நிலையம் ஒன்றினுள் புகுந்து, பொலிஸ் அதிகாரியைச் சுட் டுக் காயப்படுத்தியமை தொடர்பாக, நால்வர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

ஷெற்ல்ஸ்ரன் பொலிஸ் நிலை யத்திலிருந்து 200 யார் தூரத்திலுள்ள கட்டடம் ஒன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், இவர்களைக் கைது செய்தனர். கடந்த ஞாயிறன்று நடை பெற்ற துப்பாக்கிச் சூட்டில்- 53 வய தான பொலிஸ் கொன்ஸ்டபிள் படு காயமடைந்தார். இவரின் நிலை ஆபத்தாக இருப்பதாக வைத்தியர் கள் தெரிவித்தனர். பொலிஸ் சேவை யில் 31 வருடமாகப் பணியாற்றிய இவர் மீதான தாக்குதல் குறித்த விசாரணைக்கு, அப்பகுதிப் பொதுமக் களும் நல்ல ஆதரவு வழங்குவதாகத தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்கா வந்துள்ள இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுசோனியுடன் அளவளாவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

# அயோத்தியில் ராமர் கோயில்; பாரதீய ஜனதா ஆதரவு தரும்!

## அரசாங்கமும் சட்டம் கொண்டு வருமாம்

அயோத்தியில் மீண்டும் இராமர் கோவிலைக் கட்டுவதற்கு ஒத்து ழைக்கப்போவதாக பாரதீய ஜன தாக் கட்சி தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது.

அங்கு மசூதி இடிக்கப்பட்ட பகு தியில், மீண்டும் இராமர் கோவி லைக் கட்டுவதற்கு ஏற்றவகையில் அரசாங்கம் சட்டமொன்றைக் கொண்டுவரவேண்டுமெனவும் - பார தீய ஜனதாக் கட்சி தெரிவித்துள் ளது.

1999 ஆம் ஆண்டு அயோத்தி யில் - இந்துமத கரசேவகர்களால் மசூதி இடிக்கப்பட்ட பகுதி, இராமர் பிறந்த இடமெனக் கூறி அப்பகுதி யில், அவருக்கு ஆலயமொன்றைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டதனால், ஏற்பட்ட கலவரங்க ளில் இதுவரை ஆயிரக்கணக்கா னோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் - ஆளும் பார தீய ஜனதாக் கட்சி, இவ்விதமாக தீர்மானங்களை நிறைவேற்றியிருப் பது - சிக்கலை மேலும் அதிகரிக் கவே செய்யுமென அரசியல் அவ தானிகள் கூறுகின்றனர்.

ராஜ்பூரில் நடைபெற்றுவரும், பாரதீய ஜனதாக் கட்சியின் மூன்று நாள் தேசிய மாநாட்டில் - இத்தீர் மானங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கு, துணைப் பிரதமர் அத்வானி தலை மையிலான இந்துமத அடிப்படை வாதிகளின் நெருக்குதலே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மசூதி இடிக்கப் பட்ட பகுதியில், ஏற்கனவே இராமர் ஆலயம் இருந்ததா என்பதை ஆராய்ந்துவரும் புதைபொருளாய்வா ளர்களின் அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட் டாக வேண்டுமென, லக்னோ நீதிமன றம் - இம்மாத ஆரம்பத்தில் உத்தர விட்டதும் குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### ஆப்கானில் மீண்டும் பாகிஸ்தான் தூதரகம்!

ஆப்கான் தலைநகர் காபூலில், மீண்டும் பாகிஸ்தானியத் தூதரகம் திறக்கப்பட்டுள்ளது. இத்தூதரகம் திறக்கப்பட்டதுமே - ஏராளமான ஆப்கானியர்கள் விஸா பெறுவதற் காகத் தூதரகம் முன்பாகக் காத்து நின்றனர்.

சில தினங்களுக்கு முன் ஆப்கா னில் நடைபெற்ற கலகமொன்றில், பாகிஸ்தான் தூதரகம் அடித்து நொருக்கப்பட்டது தெரிந்ததே. இச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் கைதாகியுள்ளனர். தூதரகச் சேதங் களுக்கு ஆப்கான் நட்டஈடு தர இணங் கியுள்ளது என, பாகிஸ்தானியத் தூத ரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



லைபீரியாவில் தொடரும் கடுமையான சண்டையில் - அரச படைகளுக்கு உற்சாகமளிக்க, வீதியில் இறங்கியுள்ள அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரைப் படத்தில் காணலாம்.

# பலஸ்தீன கைதிகள் விடுதலை தொடர்பில் இஸ்ரேல் - பலஸ்தீன பிரதமர்கள் முறுகல்!



இஸ்ரேல் - பலஸ்தீனிய சமா தான நடவடிக்கைகளின் ஒரு கட்ட மான - பலஸ்தீன கைதிகளை விடு வித்தல் தொடர்பாக, இஸ்லேயப் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கும், பலஸ் தீனப் பிரதமர் அப்பாஸ"க்கும் இடையே பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இவ்விவகாரம் தொடர்பாக, இரு பிர தமர்களும் காரசாரமாக விவாதித்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுவிக்கப்படும் கைதிகளின் தொகை தொடர்பாகவே - முறுகல் நிலை எழுந்துள்ளது. எனினும், இது தொடர்பாக ஆராய்வதற்கென கூட் டுக்குழு ஒன்றை, நாளை அமைப்பது என இருதரப்பும் இணங்கியுள்ளன.

இஸ்ரேலில் சுமார் 6 ஆயிரம் பலஸ்தீனக் கைதிகள் இருந்தபோதி லும், உள்நாட்டில் எழுந்த எதிர்ப்பு அலைகளால் - இஸ்ரேலியப் பிரதமர் நூற்றுக்கணக்கான கைதிகளையே



அப்பாஸும், ஷரோனும்

விடுவிக்க இணங்கினார். எனினும், அனைவருக்கும் பொதுமன்னிப்பை வழங்கி, அவர்களை விடுவிக்குமாறு பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் கோரி யுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குரங்குபாஞ்சான் விவகாரம்; புலிகளுக்கு அவகாசம் தேவை!

## அமைச்சர் ராஜித கூறுகிறார்

திருமலையில் குரங்குபாஞ்சான் பகுதியில் அமைக்கப்பட்ட தமது முகாமை அகற்றுவது குறித்து முடிவெடுக்க - அரசு, புலிகளுக்கு அவகாசம் அளித்துள்ளது என, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

20 வருடங்களாக அரசை எதிர்த்துப் போரிட்டவர்கள், ஒரே இரவில் அரசுக்குச் சாதகமாகத் தமது முடிவை எடுக்க மாட்டார்கள். அவர்களுக்கு அவகாசம் தேவையெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்காணிப்புக்குழு நிலைமைகளை அவதானித்து, அறிக்கை மட்டுமே சமர்ப்பிக்கலாம். அவர்களால் நிர்ப்பந்தம் எதுவும் செய்யமுடியாது. இப்படியான சந்தர்ப்பங்களில்- அமைதிப்படையின் தேவை உணரப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

# புனர்வாழ்வுப் பணிகளுக்கு ஈ.ரான் எரிபொருள் உதவி!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக - சலுகை அடிப்படையில் பெற்றோலியப் பொருட்களை வழங்க ஈரானிய அரசு முன்வந்துள்ளது.

இச்சலுகைத் திட்டத்தின்படி - இலங்கைக்கு ஈரானிய அரசு வழங்கும் பெற்றோலியப் பொருட்களுக்கான கொடுப்பனவை ஒரு வருடம் தாமதித்துச் செலுத்தலாம் என்று, ஈரானிய அரசு அறிவித்துள்ளது.

### நோர்வே...

பூர்வ பதில் எதுவும் வெளியிடப்படவில்லை.

எனினும்- முதற்கட்டமாக, அரசு ஏற்கனவே சமர்ப்பித்துள்ள திட்டவரைபு குறித்து, புலிகளின் கருத்தை அறிந்து கொள்ளும் முகமாகவே இன்றைய பேச்சு அமையுமெனத் தெரியவருகிறது.

### புலிகள்....

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குப் பாதகமான சில விடயங்களைக்கூட, தீர்வாகக் கொண்டுவர நோர்வே நாட்டவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கிடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் - இன்று அமைதி முயற்சிகளை முன்வைத்துப் பேசும் பிரதமர் ரணில், இணக்கப் பேச்சுக்களில் இருந்து விலகி தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனவும் டிக்ஷிற் மேலும் தெரிவித்தார்.

### கிழக்குக் கடல்...

கொண்டிருந்த இந்தக் கப்பல், எரிபொருள் இன்மையினால் சின்ன முகத்துவாரக் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டதாக, யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்தது.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி - கடற்படையினரின் துணையுடன், இக்கப்பல் திருகோணமலை துறைமுகம் நோக்கி கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

(01, 200)

# மட்டக்களப்பில்...

நகரிலும் கணிசமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட போதிலும், ஏறாவூர் நகரில் வழமை நிலை காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் இயங்கவில்லை. கிழக்குப் பல்கலைக்கழகம், அரசினர் ஆசிரியர் கலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரி என்பனவும் இயங்கவில்லை.

நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி, காலையில் உள்ளூர் சேவையை ஆரம்பித்த போதிலும் பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. தனியார் பஸ் சேவை முற்றாக இடம்பெறவில்லை. தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை. கொழும்பு- வாழைச்சேனை வரையான ரயில் சேவையும், வெலிக்கந்த வரையே இடம்பெற்றது.

மட்டக்களப்பு- வாழைச்சேனை, கல்முனை பிரதான வீதிகளில் ஆங்காங்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன், ஒந்தாச்சி மடத்தில்- வீதிக்குக் குறுக்காக முட்கம்பியும் கட்டப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள்- ஊழியர் வரவின்மை காரணமாக இயங்கவில்லை.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் என்பனவும் இயங்கவில்லை. நேற்று இடம்பெறவிருந்த வழக்குகள் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன. அத்துடன்- வங்கிகளும் இயங்கவில்லை, மட்டக்களப்பு பொதுச் சந்தையும், வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தைகளும் கூடவில்லை.

கல்முனையில் இருந்து அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதிகளுக்கான பஸ் சேவைகளும் நடைபெறவில்லை.

## மரண அறிவித்தல்

### செல்லையா முத்துப்பிள்ளை

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா முத்துப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லையாவின் (ஆசிரியர்), அன்பு மனைவியும், கமலநாதன் (டென்மார்க்), செல்வராணி (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), சற்குணதேவி (டென்மார்க்), கனகராசா (தபாற்கந்தோர் - ஆனைக்கோட்டை), ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஆனைக்கோட்டையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செ.மகாலிங்கம்
(மருமகன்)

*மூத்தநயினார் கோவில் வீதி,*
*ஆனைக்கோட்டை*
(427)

# குடாநாட்டு நீர்வளத்தைப் பேண நோர்வே நிதியுதவி வழங்கும்!

யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தைப் பேணுவதற்கு - நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியுடன், புனர்வாழ்வு அமைச்சு, பாரிய திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு, நோர்வே அரசாங்கம் 150 மில்லியன் ரூபா நிதியுதவியினை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் குடிநீர் மாசடைவதைத் தடுப்பதற்கும், உவர்நீரை நன்னீராக மாற்றுவதற்கும், மழைநீரைச் சேகரித்து குடிநீராகப் பயன்படுத்துவதற்கும், யாழ்.குடாநாட்டு மக்களுக்கு நீண்ட காலத்திற்கு நன்னீரை வழங்குவதற்கும் வசதியாகவே- இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ்- வழுக்கியாறு, அரியாலையிலுள்ள உப்பாறு மற்றும் யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட குளங்கள் யாவும் புனரமைக்கப்படவுள்ளதுடன், மழைநீரைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டின் நீர்வளம் மாசடைந்து வருவதாலும், பல இரசாயனப் பொருட்கள் குடிநீரில் கலப்பதாலும்- யாழ்.குடாநாட்டில் எதிர்காலத்தில் குடிநீரைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்படலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது. இதனால் - எதிர்காலத்தில் யாழ். குடாநாட்டில் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

இதற்குத் தீர்வுகாணவே புனர்வாழ்வு அமைச்சு - நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்படி திட்டத்தை மிகவிரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது. (லி)

### மல்லாகம் விபத்தில் இருவர் படுகாயம்

(மல்லாகம்)

மல்லாகம் சந்தியில் - நேற்று மாலை நடைபெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில், பல்கலைக்கழக மாணவி ஒருவரும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் படுகாயமடைந்தனர்.

மல்லாகத்தைச் சேர்ந்த சிவராஜா ராஜி (வயது 24), என்பவரே காயமடைந்த மாணவியாவார். இவர் மேலதிக சிகிச்சைக்காக, தெல்லிப்பளை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

### சதுரங்கத்தில் தங்கப்பதக்கம்

கொழும்பு இசிபத்தான கல்லூரியில் நடைபெற்ற கோடன் குயீன்ஸ் சதுரங்கக் கழகத்தின் பகிரங்க சதுரங்கச் சுற்றுப்போட்டியில்- நல்லூரைச் சேர்ந்த சிவானந்தன் சிவோதயன் தங்கப் பதக்கம் பெற்றார்.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில், ஐந்துக்கு நாலரைப் புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தை சிவோதயன் பெற்றார். இப்போட்டியில் சுமார் 300 வீரர்கள் பங்கேற்றிருந்தனர்.

சிவோதயன் - 'நமது ஈழநாடு' விளையாட்டரங்கு மூலம் ஏற்கனவே அறிமுகமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மாளிகை அயலில் பேரணிகள் நடத்தத் தடை!

உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் - ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள பகுதிகளில் - எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த முடியாது என, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவை மீறுவோர் மீது, கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள - சைத்திய வீதி, பொலிஸ் தலைமையக வீதி, லோட்டஸ் வீதி, நாடாளுமன்றச் சுற்றுவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய உயர்பாதுகாப்பு வலயத்திலேயே - ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கைக்கு அமையவே- இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா - காலிமுகத் திடலையும், உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், இதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய உத்தரவுக்கு அமைய - குறிப்பிட்ட பகுதியில் மக்கள் நடமாட்டத்துக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் தடைவிதிக்கப்படவுள்ளதுடன், கட்டடங்களைப் புதிதாக அமைப்பது அல்லது திருத்தியமைப்பதற்கு உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் இடைக்கால நிர்வாக வரைபு அபிலாஷைகளை தீர்த்துவிடவில்லை

## அவுஸ்திரேலிய அமைச்சரிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு)

கடந்தகால வரலாற்றை நோக்கும்போது, சமாதான முயற்சி நிச்சயமாக வெற்றிபெறும் என்ற அதீத நம்பிக்கை, தமிழ் மக்களுக்கில்லை. தமிழ் மக்களுக்கு இறுதித்தீர்வை அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கை ஏற்படவேண்டுமானால், அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபையினை அரசாங்கம் வட - கிழக்குக்கு வழங்கவேண்டும் என்று அவுஸ்திரேலியாவின் குடிவரவு, பல்கலாசார சுதேசத்துறை அமைச்சர் பிலிப் ரூடொக்கைச் சந்தித்துப் பேசிய, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எடுத்துக்கூறியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக - விஜயம் செய்த அவுஸ்திரேலிய அமைச்சரை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, தங்கவடிவேல், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். நேற்றுக்காலை 10 மணிமுதல் 11 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

வட - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை - வடக்கு, கிழக்கின் புனரமைப்பு, மீள்குடியேற்ற அதிகாரங்களை மட்டும் கொண்டிருக்கக்கூடாது. தற்போது அரசாங்கத்தினால், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள திட்ட நகலில், காணி அதிகாரம் - இடைக்கால நிர்வாக சபைக்கு இல்லையெனப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வட - கிழக்கைப் பொறுத்தவரையில், காணிப்பிரச்சினை கடந்த 50 வருடங்களாகவே இருந்துவருகின்றது. தமிழ்ப் பிரதேசத்தில், சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. காணி அதிகாரம் நிச்சயமாகப் பிராந்தியத்துக்கு வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் திட்டவரைவில் இந்த அதிகாரம் வழங்கப்படாமை ஏமாற்றத்தை அளிக்கின்றது.

திட்டவரைபில் பொலிஸ் அதிகாரமும் வழங்கப்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய- இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூட, பொலிஸ் அதிகாரம் பிராந்தியத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்போது பொலிஸ் அதிகாரமும் பிராந்தியத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் எடுத்துக்கூறியுள்ளனர்.

திட்டவரைபில் - பிரதேச பாதுகாப்பு விடய அதிகாரமும் குறிப்பிடப்படவில்லை. வட - கிழக்கில் தமிழ்த் தலைவர்கள், ஜனநாயக வழியில் கொள்கைகளை முன்னெடுத்தபோது படையினரைப் பயன்படுத்தி அவை ஒடுக்கப்பட்டன.

எனவே, மக்களின் உரிமையை வெளிப்படுத்தப் பாதுகாப்புத் திட்டம் இருக்கவேண்டும். இதனைவிட, அரசாங்கத்தின் திட்டவரைபில் கொள்கை வகுப்பும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. கொள்கை வகுப்பில்லாத இடைக்கால நிர்வாகசபை பயனற்றது. அரசாங்கம் அனுப்பியுள்ள திட்டவரைபு ஆலோசனையினை, முழுமையாக ஏற்கமுடியாது. நிச்சயமாக மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர், அவுஸ்திரேலிய அமைச்சரிடம் கூறியுள்ளனர்.

ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்ட பொழுதிலும், வட - கிழக்கில் மீள்குடியேற்றப் பிரச்சினை இன்னமும் தீரவில்லை. இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களது வீடுகளிலேயே இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். எனவே நிரந்தரத் தீர்வு ஏற்படும்வரை, அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள தமிழர்களை, இலங்கைக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் திருப்பி அனுப்பக்கூடாது என்றும், கூட்டமைப்பினர் அவுஸ்திரேலிய அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்- பொருளாதார நோக்கத்துக்காக அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்களையே திருப்பியனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும், அகதிகளைத் திருப்பி அனுப்பும் நோக்கம் தற்போது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் போராட்டம்!

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து, இன்று கொழும்பில் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்றலில் நடைபெறவிருக்கும் இப்போராட்டத்தில் - ஆயிரக் கணக்கான பட்டதாரிகள் பங்குபற்ற விருக்கின்றனர். இந்த ஆண்டின் இறுதிக்குள் தமக்குப் பொருத்தமான வேலைவாய்ப்பை அரசு வழங்க வேண்டும் என்று கோரியே இப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

(01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.